6

# மகோபந்நியாசம்

T.D.R.C. NO: 2098
4-1908

M91
NO7
17388

555

25 DEC 1963

உ

[illegible]

பரோடா ஸம்ஸ்தானாதிபதிகளாகிய

மாட்சிமைதங்கிய

கைக்வார் மஹாராஜா அவர்கள்,

கல்கத்தாவில் நடந்த

இந்தியக் கைத்தொழிற் சங்கத்தின்

இரண்டாவது கூட்டத்தில்

செய்தருளிய

# மஹோபந்நியாசம்.

555
4.08

ஆர். ஸ்ரீநிவாஸ ராகவ ஐயங்கார்

மொழிபெயர்த்தது.

("செந்தமிழ்"லிருந்து எடுத்துப்பதிப்பிக்கப்பட்டது)

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப்

பதிப்பு.

1907

வந்தேமாதரம்.

பரோடா ஸம்ஸ்தானாதிபதிகளாகிய
மாட்சிமைதங்கிய

# கைக்வார் மஹாராஜா அவர்கள்

கல்கத்தாவில் நடந்த

## இந்தியக் கைத்தொழிற் சங்கத்தின்

இரண்டாவது கூட்டத்தில்
செய்தருளிய

# மஹோபந்நியாசம்.

ஆர். ஸ்ரீநிவாஸ ராகவ ஐயங்கார்
மொழிபெயர்த்தது.

["செந்தமிழ்"ப்பத்திரிகையினின்று எடுத்துப்பதிப்பிக்கப்பட்டது]

மதுரை:
தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.
1907

5555
4-08
820-8116
2098



மைசூர் மஹாராஜா.　　　பரோடா மஹாராஜா.

Printed at the Sri Vani Vilas Press, Srirangam.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
25 DEC 1908
MADRAS

உ

வந்தேமாதரம்.

# முகவுரை.

பரோடா ஸம்ஸ்தானம் என்பது இந்தியாவிலுள்ள சுதேச ராஜ்யங்களிலே முதன்மை பெற்றவைகளில் ஒன்று. இது பம்பாய் ராஜதானியிலுள்ள கூர்ஜ்ஜரப்பிரதேசமாகும். இவ்விராஜ்யத்தை இப்போது ஆட்சிபுரிந்தருளுவோர் மகாராஜா ஸயாஜிராவ் கைக்வார் என்பவர்கள். இவர்க்கு முன் பரோடா அரசராயிருந்த மல்ஹாரர்ராவ் கைக்வார் என்பவர், 1875-ம்௵ பிரிட்டிஷ் கவர்ண்மெண்டாரால் பெருங்குற்றஞ்சாட்டப்பட்டு ராஜ்யத்தினின்றும் விலக்கப்பட்டார். அவர் விலகியதும், அவர்க்கு முன் ஆட்சிபுரிந்த கண்டோராவின் மனைவியாராகிய ஜம்னுபாய்க்கு, ஒரு ராஜகுமாரனை ஸ்வீகாரஞ் செய்துகொள்ளும்படி இந்தியா கவர்ண்மெண்டார் உத்தரவுதர, ஜம்னுபாயும் ஒரு தக்க குமாரனுக்காக ராஜ்யமுழுதும் தேடுவாளாயினள். கடைசியாக, இந்த வமிசத்தின் மூலபுருஷரான பாலாஜிராவ் கைக்வாரின் பரம்பரையில் இருந்தவிடந்தெரியாமல் மூன்று குமாரர்கள் இருக்கின்றனரென்று அவ்வம்மையறிந்து, அவர்களை வரவழைத்தார். அவர்களில் நடு சகோதரனும் அப்போது 12-வயதுடையவனுமாயிருந்த கோபாலராவ் என்ற பையனையே மகாராணி பட்டத்துக்குத் தெரிந்தெடுத்தார். அக்குமாரரே, இப்போது அந்த ஸம்ஸ்தானாதிபதியாய்ப் பெரும்புகழ்பெற்று விளங்கும் மகாராஜா ஸயாஜிராவ் கைக்வார். இவர் இளமையிலே மகாமேதாவிகள் பார்வையில் வளர்ந்து கல்வியறிவு ஒழுக்கங்களில் நிகரற்று விளங்கினர். இவர் 1881-௵ தக்கபருவமடைந்து ராஜ்யத்தைத் தாமே நேரில்ஆளத் தொடங்கினர். அதுமுதல் தம் ராஜ்யத்தின் க்ஷேமத்தை உயர்த்துவதில் இம்மகாராஜா அரும்பாடுபட்டு வருகின்றார். தம் ராஜ்யத்தில் தமக்கு முன் ஏற்பட்டிருந்த வீண்வரிகளையெல்லாம் தள்ளிவிட்டனர். வியாபாரத்துக்கு இடையூறாயிருந்த அநேகம் வரிகளும் எடுபட்டன. பாதுகாப்பு நீதிமுதலிய விஷயங்களில் எல்லாரும் மெச்சும்படியான ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர். இவைகளெல்லாவற்றையும்விட மகாராஜா அவர்கள் வித்யாவிஷயத்தில் மிகுந்த பிரயாசையெடுத்துவருகிறார்கள். கண்டவிடங்களில் எல்லாம் பள்ளிக்கூடங்களேற்படுத்தி வித்தியாதானத்தை விமரிசையாக நடத்திவருகிறார்கள். இம்மகான் பெண்கல்வி விஷயமாகச் செய்யும் முயற்சிக்கு அளவில்லை. தொழிற்பயிற்சி வித்யாசாலையும் ஏற்படுத்தியதினின்று அநேக விற்பன்னர் வருஷாவருஷம் வெளிவந்து உபகரிக்கின்றனர். ஆசார விஷயத்தில் இவர்தான் முதன்முதல் சுதேச ராஜ்யங்களி

ல் ஒருவித நிபந்தனை உண்டாக்கினர். இவர் நாட்டிலுள்ள பெண்களெல்லாம் பன்னிரண்டுவயதுக்கு மேலேதான் கல்யாணஞ்செய்து கொடுக்கப்படவேண்டுமென்றும் அதை மீறி நடப்பவர்கள் தண்டனைக்குள்ளாக்கப்படுவரென்றும் சட்டமுண்டாக்கியிருக்கின்றனர். தர்மவைத்திய சாலைகளும் விசாலமான பாதைகளும் இருப்புப்பாதைகளும் சுகாதார விஷயங்களும் மகாராஜாவினுடைய ஞானபார்வையிலிருந்து விருத்தியாகி வருதலால் ஜனங்களெல்லாம் அளவற்ற சந்தோஷத்தோடுவாழ்ந்து வருகின்றார்கள்.

நம் இந்தியாவில், பரோடா கைக்வாரவர்களைப் போன்ற மகாராஜாக்கள் கிடைப்பதரிதென்றே சொல்லலாம். இவ்விந்தியநாடு, அவரைப் போன்ற தேசாபிமான சிரோமணிகள் பலரைப்பெற்றால் என்னகுறைவிருக்கும்? இவர் சில அரசரைப்போலத் தம் சுகத்தையே பாராட்டாது, தமது நாட்டுக் குடிகளின் க்ஷேமத்திலேயே கண்ணுங்கருத்துமாய் இருந்து வருகின்றார். தம் நாட்டுக்குடிகள் க்ஷேமமட்டுமன்று; இவ்விந்திய தேச ஜனங்கள் எல்லாரும் க்ஷேமமாய் வாழவேண்டுமென்பதும் அவர்கள் தங்கள் வறுமைநிலை நீங்கி செல்வங்கொழிப்பவர்களாக வேண்டுமென்பதும் மகாராஜாவின் மனப்பூர்வமானவிருப்பம். இவர் இந்தியஜனங்களத்தனைபேரிடத்தும் சகோதரவாஞ்சை வைத்திருப்பவர். இந்த மகான் இந்தியர்கள் நாளுக்குநாள் வறுமையில் அமிழ்ந்துவருவதை அறிந்து, இந்தியாவின் பொருளாதாரநிலை பெருகவேண்டுமானால், இந்நாட்டில் பலவகைப்பட்ட புதுத்தொழில்கள் செழிக்கவேண்டுமென்றும், பழையநாளில் ஓங்கிச் செழித்து இப்போது நசித்துப்போயிருக்கும் தொழில்கள் மறுபடியும் உயிர்பெறவேண்டுமென்றும், சமயம்வாய்த்த போதெல்லாம வற்புறுத்துவது இவ்வேந்தரின் வழக்கமாயிருக்கின்றது. இந்நாட்டில் எங்கும் புதிதாய்த் தோன்றியிருக்கும் சுதேசிய உணர்ச்சியை மகாராஜா பெரிதும் மெச்சுகிறவர். இந்தியாவிற்கு ஏதேனும் பலத்த நன்மைகள் உண்டாகவேண்டுமானால், அவைகள், இந்தியர்க்குள் தோன்றியிருக்கும் சுதேசிய உணர்ச்சி காரணமாகவே விளையவேண்டுமென்று யாதொரு கள்ளத்தனமுமின்றி, பகிரங்கமாக எடுத்துச்சொல்லிவருகிறார். இவ்வாறு, நாம்வேறு இந்தியஜனசமூகம்வேறு என்ற வித்தியாசமே பாராட்டாமல் ஆரிய மாதாவின் வயிற்றிற் பிறந்து வளரும் பல்லாயிரக்கணக்கான மக்களில் தாமும் ஒருவரெனத் தம்மைப் பாவித்துக்கொண்டு, சமயம் வாய்த்தபோதெல்லாம், தமது சகோதரர்களுக்கு "உங்கள் நாட்டுப் பொருளாதாரநிலையின் விருத்தி, நீங்கள் நாட்டுத் தொழில்களைப் புறக்கணிக்காமல் விருத்திசெய்வதைப்பொறுத்திருக்கிறது" என்று வற்புறுத்திவண்ணமாயிருக்கும் பரோடா மகாராஜாவுக்கு, இந்திய ஜனசமூகத்தவர், என்ன கைம்மாறு செய்யவல்லர்?

"உயர்ந்தோங் குச்சி உவாமதி போல
நிவந்தோங்கு வெண்குடை மண்ணக நிழற்செய
வேலுங் கோலும் அருட்கண் விழிக்க
தீதின்று உருள்கநீ யேந்திய திகிரி
நினக்கென வரைந்த ஆண்டுக ளெல்லாம்
மனக்கினி தாக வாழிய வேந்தே"

என்று வாழ்த்துவதே நம்மாலாகத்தக்கது.

இம்மகாராஜாவின் 25-வது ஆட்சிநிறைவு இவ்வருஷம் கொண்டாடப் பெற்றது. அக்காலத்தில், பரோடா சம்ஸ்தான வாசிகள் மட்டுமன்று; இந்தியநாடு முழுவதும் இம்மகாராஜாவை வாழ்த்திப் போற்றிமகிழ்ந்தன.

மகாராஜா அவர்கள் தஞ்சையரச வம்சத்தில் ஜிம்னுபாய் என்ற ராஜகுமாரத்தியைமணம்புரிந்து படேசிங்ராவ்என்ற குமாரனைப் பெற்றனர். ஆனால் இம்மகாராணி புத்திரனைப்பெற்ற சில வருஷத்துக்கெல்லாம் வியோகமானபடியால் அதேபெயர்கொண்ட மற்றொரு ராஜகுமாரத்தியை மகாராஜா விவாகஞ்செய்துகொண்டார். இப்போதுள்ள மகாராணி கல்வியறிவொழுக்கங்களில் ஸ்திரீரத்தினமாய்ச் சிறந்து விளங்குகிறார்கள். இம்மகாராணிக்கு மூன்று குமாரர்களும் ஒரு பெண்குழந்தையு மிருக்கின்றனர் மகாராஜா ஸயாஜிராவ் கைக்வார் அவர்கட்கு தம்முடைய நாட்டுச்குடிகளின் மேல் மரணதண்டனை விதிக்கவும், விதித்த தண்டனையை மாற்றவும் அதிகாரமும், இருபத்தொரு குண்டு மரியாதையும் உண்டு. நிற்க.

இவ்வாண்டில், கல்கத்தாவிலே நடந்த இந்தியக்கைத்தொழிற் சங்கத்தின் இரண்டாவது வருஷப்பெருங்கூட்டத்திலே, மகாராஜா அவர்கள், ஆங்கிலபாஷையிற் செய்தருளிய மகோபந்யாசம், அத்தியற்புதமானது. நந்நாட்டாரெல்லாம் முக்கியமாகப் படித்துத் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் அநேகம் இதில் அடங்கியிருக்கின்றன. அதுபற்றி அதைத் தமிழர்க்கு விளங்கும்படியாக மொழிபெயர்த்து, மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் "செந்தமிழ்"ப் பத்திரிகையிலும், தனிப்புத்தகமாகவும் இப்போது வெளியிடப்பட்டிருக்கிறது. தேசக்ஷேமத்தைக் கருதுவோரெல்லாம், இம் மஹோபந்யாசத்தைப் படித்து அதன்படி யொழுகுதல் இன்றியமையாததென்று சொல்லவேண்டுவதில்லை. சுபம்.

R. S.

உ

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில்

# விற்கப்பெறும்

முக்கியமான புத்தகங்கள்.

## ௧. பன்னூற்றிரட்டு.

இரண்டாம் பதிப்பு.

மதுரைத்தமிழ்ச் சங்கத்து அக்கிராசனாதிபதியாகிய, பாலவனத்தம் ஜமீந்தார் ஸ்ரீமாந்-பாண்டித்துரைத்தேவரவர்களால், தமிழ்நூல்கள் பலவற்றையும் ஆராய்ந்து வெளியிடப்பட்ட இந்நூல், முன்னையவற்றோடு புதியவாக 500-பாடல்கள் பலநூலினின்று எடுத்துச் சேர்த்து மதுரைத்தமிழ்ச் சங்கப்பதிப்பாக இப்போது வெளிவந்துள்ளது. இப்புத்தகம் டிம்மி அக்டோவா ஸைஸில் 48-பாரங்களுடையது. நல்ல காகிதத்தில் சிறக்க அச்சிடப்பட்டது. இந்நூலின் அருமை பெருமைகளும், தமிழ்மக்களொவ்வொருவர் கையிலும் இப்புத்தகமிருத்தற்குரியதென்பதும் தமிழுலகம் அறிந்த உண்மையாதலால் அவற்றை இங்கே விரிக்க எண்ணமில்லை. இதன் விலை ரூபா இரண்டு. வேண்டுவோர் இப்போதே எழுதிப்பெற்றுக்கொள்ளக்கடவர்

## ௨. வைத்தியசாரசங்கிரகம்.

இராமநாதபுரம் ஸம்ஸ்தானம் ஸ்ரீமாந்-பொன்னுச்சாமித்தேவரவர்களால், பல வருடங்களுக்கு முன்பு தக்க சுதேசிய வைத்தியரைக்கொண்டு அநுபவசித்தமான மருத்துவ முறைகளை யாவரும் அறியும்படி செய்விக்கப்பட்ட இந்நூலானது, இப்போது இச்சங்கத்தில் செவ்வையாக ஆராயப்பெற்று, இன்னும் பல இன்றியமையாத விஷயங்களும் சேர்த்து அச்சிடப்பட்டு முடிந்துள்ளது. ராயல் எட்டுப்பக்கத்தில், 70-பாரம் கொண்டது. ஒவ்வொருவர் கையிலும் இஃதிருத்தற்குரியது. இதன் விலை ரூபாய். 3—0—0.

☞ இச்சங்கப்பதிப்பாகிய மேற்கூறிய புத்தகங்களும் பிறவும், சங்கத்துச் "செந்தமிழ்"ச்சந்தாதார்க்கு ரூபாவுக்கு 4-அணாத்தள்ளி விலைக்குத்தரும்படி சௌகரியஞ் செய்துகொடுக்கப்பட்டிருக்குஞ் செய்தி கவனிக்கத்தக்கது.

தபாற்கூலி பிரத்தியேகம்.

இங்ஙனம்,

மானேஜர்,

தமிழ்ச் சங்கம், மதுரை.

11-5
21 DEC 1908
MADRAS

### மாட்சிதங்கிய பரோடாமகாராஜா அவர்கள்
### கைத்தொழிலைப்பற்றிச் செய்த

# மகோபந்நியாசம்.

கனம் அக்கிராசனாதிபதிக்கும், இச்சங்கத்துப் பிரதிநிதிகளுக்கும் மற்றுமுள்ள கனவான்களுக்கும் விஞ்ஞாபனம்.

நான் ஐரோப்பா அமெரிக்காச் சுற்றுப் பிரயாணங்களிலிருந்து திரும்பியபின், சென்றமாதந்தான், உங்களது அறிவாற்றல் மிகக காரியதரிசியாகிய ராவ்பஹதூர் ஆர். என். மதோல்கார் (R. N. Mudholkar) என்பால் வந்து, நான் இத்தொழிற் சங்கத்தில் பிரதமோபந்நியாசம் செய்தற்கு அவசியம் வரவேண்டுமென்றும், இது, தொழிற்சங்கத்தாரின் ஏகோபித்தவேண்டுகோளென்றும் எனக்குத் தெரிவித்தார். இயற்கையாகவே, இவ்வேண்டுகோட்கு இணங்குவதில் நான் சிறிது பின்வாங்கினேன். ஏனென்றால், அந்நியதேச யாத்திரையிலிருந்து இப்போதுதான் திரும்பி வந்தபடியால் என்மேற்சுமந்துள்ள அரசியல்வேலை மிகுதியாலும், நீங்கள் கைக்கொண்ட இவ்வுத்தம காரியத்தில் உங்களுக்குப் புத்திமதி சொல்லக்கூடியவர்கள், என்னைவிட, மேலானவர்களிருக்கிறார்களென்று நான் தெளிந்ததாலுமேயாம். என்றாலும், கனவான்களே! இக்காரணங்களைச் சொல்லி நான் உங்கள் காரியதரிசியிடமிருந்து தப்பிக்கொள்ள முடியவில்லை. அவர், தொழிற்சங்கத்தாரது வேண்டுகோட்கு இணங்கும்படி என்னைக்கட்டாயப்படுத்தினதுமன்றி, நான் அப்படி இணங்குவதானது நம்மெல்லா இருதயத்திலுமுள்ள பெருங்காரியமாகிய தேசநன்மைக்கு உழைப்பதாகும் என்று பக்ஷத்துடன் எனக்கு வற்புறுத்தினார். இம்மொழிக்கு நான் இணங்கவேண்டியது கடமையென்று நினைத்

தேன். தற்காலத்துக் கைத்தொழிலபிவிர்த்தியின் பொருட்டு உழைக்க நாமெல்லோரும் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைத் திடசிந்தையுடன் உணருகிறேன்.

நம் ஜீவனோபாயமுறை எதுவாயிருந்தாலும் சரி, நம்தேசக் கைத்தொழிலபிவிர்த்தியைக் கருதாமல் அலக்ஷியம்செய்வது,நம்மையும் நம் நாட்டையுமே புறக்கணித்ததாகும். நான் அடிக்கடி உய்த்துணர்ந்து வெளியிட்டிருக்கிறபடியே, இன்றைக்கும் வெளியிடுவதென்னவென்றால், பொது நன்மை என்பது எல்லாருக்கும் ஒரு தன்மைத்தானது; உங்கட்கு எது நன்மைபெருமைகளைக் கொடுக்கிறதோ அதுவே எங்களுக்கு நன்மைபெருமைகளைக் கொடுக்கிறது. உங்கள் க்ஷேமலாபத்துக்கு எது இடையூறாயிருக்கிறதோ, அது எங்களுக்கும் அப்படியே அமைகிறது. மேலும், நம் வாழ்நாளுடன் சம்பந்தப்பட்ட பற்பல துறைகளில் நாம் உழைக்கும் உழைப்பு ராஜகீய விஷயமானாலும் சரி, ஜாதியாசாரவிஷயங்களானாலும் சரி, கைத்தொழில் விஷயமாயினும் சரி—இவையெல்லாம் ஒன்றோடொன்று ஒற்றுமைபெற்றவையாதலால், ஒன்றில் நாம் விசேஷத் தேர்ச்சியடையும்போது, மற்றத்துறைகளிலும் அவ்விதத் தேர்ச்சியை நாம் அடைந்திருக்கவேண்டியது ஆவசியகமாகின்றது. மேல் தோற்றத்தில் வித்தியாசப்பட்ட துறைகள்போலக் காட்டி, அபிவிர்த்தியாகிய பலனையளிப்பதில் ஒத்தகாரணமாயுள்ள மேற்படி மனோவுழைப்புகளே வாழ்நாள்களைச் சிறப்பித்து ஓங்கச்செய்கின்றன. நாம் விஷயங்களைப் பரந்தகண்ணோடு பார்த்தாற்றான், "அபிவிர்த்தி" என்னும் யந்திரத்தின் கூறுகளே மேற்குறித்த துறைகள்—என்பது வெளியாகும்.

## கைத்தொழிலின் பூர்வசரித்திரம்.

கனவான்களே! பூர்வகாலத்து இந்தியக்கைத்தொழில்களைப் பற்றி விவரமாய்ச்சொல்லி அதிக நேரத்தைக்கழிக்க மாட்டேன் என்றாலும், அவைசம்பந்தப்பட்ட குறிப்பான சிலவிஷயங்களை மாத்திரம் சுருங்கச்சொல்லவேண்டுவது இதுபோன்றசந்தர்ப்பத்துக்கு மிகவும் ஏற்றதாகும். முற்காலந்தொட்டே நம் இந்தியதேசம் அழகான வஸ்திரவகைகளுக்குப் பேர்பெற்றதாயிருந்ததென்பது உங்க

ளுக்குத்தெரியும். பழைய சரித்திரகாரர்கள், இந்தியப்பஞ்சு வியாபாரமானது பூர்வகாலத்தில் அஸிரியா, பாபிலோன் முதலிய இடங்களிலும் * பரவியிருந்ததென்று சொல்லுகிறார்கள். நம் இந்தியா ஒன்றிலேமாத்திரம் உண்டாகத்தக்க அவுரிநீலங்களின் சின்னங்கள், எகிப்தியர் காத்துவந்த பிரேதங்களின் (Mummy) † வஸ்திரங்களிலே பூதக்கண்ணாடியின் உதவிகொண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தியத் தந்தங்களும் மற்றுமுள்ள அநேக பண்டங்களும் எகிப்து தேசத்துக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டிருக்கலாமென்று ஊகிக்கப்படுகிறது. பிராசீனபிரசித்த வியாபாரிகளாகிய பினீஷியர்கள் ‡ நம் இந்தியாவோடு பிரபலமாக வியாபாரஞ்செய்தார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. மேல்நாடுகளுக்கு இவர்கள் கொண்டுபோய் வியாபாரஞ்செய்த வாசனைச்சரக்குகள், விலையுயர்ந்த கற்கள், கருங்காலிமரங்கள், தங்கவேலை சித்திரத்தையல்வேலைப் பண்டங்கள்—ஆகிய இவையெல்லாம் இந்தியாவிலிருந்து கொண்டுபோனவைகளே.

இவர்க்குப்பின் வெகுகாலம் கழித்துத்தான் கிரேக்கர்கள் நாகரீகமடைந்தார்கள். "சரித்திரகர்த்தர்கட்குத் தகப்பன்" என்னும் புகழ்பெற்ற ஹெரடோடஸ் (Herodotus) என்பவர், நம் இந்தியப் பருத்தியை "மரங்களில் வளரும் உரோமம்" என்றும், "ஆட்டுரோமத்தைக் காட்டிலும் நயமும் விலையுயர்ந்ததுமான" தென்றும் சொல்லுகிறார்.

கிறிஸ்தப்தத்துக்கு முந்திய நூற்றாண்டுகளில் இந்தியாவுக்கும் மேனாட்டுக்கும் பெருத்தவியாபாரம் நடந்துவந்தது. ரோமாபுரி வல்லமையுங்கீர்த்தியும் அடைந்திருந்த காலத்தும், அலெக்ஸக்

---

* இவை ஆசியாகண்டத்தின் தெற்குக்கோடியிலுள்ள நாடுகள். பூர்வத்தில் நாகரீகம் பெற்றிருந்த தேசங்கள் இவை.

† இப்பிரேதங்கள், பூர்வீகஎகிப்துதேசத்தாரால் சுகந்ததிரவியமிட்டுப் பெரிதும் போற்றிக்காக்கப்பட்டன. இவைகள் நீலநதி (Nile) பாயும் பிரதேசங்களிலுள்ள குகைகளில் கண்டுபிடிக்கப்பட்டன.

‡ இவர்கள் முன்னாளில் மிக்க நாகரீகம் பெற்ற வியாபாரிகள்; இவர்கள் பூர்வகாலத்தே கப்பல் வியாபாரத்தில் தேர்ந்தவரல்லாராயினும், ஆசியாமைனர், சிரியா, மற்றும் மத்தியதரைக்கடலைச் சார்ந்த நாடு இவைகளில் இவர்கள்வியாபாரம் மிகுந்திருந்தது.

ண்டிரியா செழித்தவியாபாரஸ்தலமாகிய காலத்திலும் நம்முடைய வியாபாரம் அதிதீவிரமாகவும் மிகுதியாகவும் நடந்தது. பட்டுநூல் வகைகளும், நீலக்கற்களும், அவுரி நீலங்களும், வஸ்திரவகைகளும் ஸிந்துநதி முகத்துவாரத்திலுள்ள துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன. முக்கியமான கடல்வியாபாரஸ்தானமாகிய—இந்துக்களால் 'பாருகச்ச' என்றும், ரோமரால் 'பாரிகாஸா' என்றும் அழைக்கப்பட்ட—பிரீச் (Breach) துறைமுகத்தில், தங்கம்வெள்ளி முதலான லோகங்களும், கண்ணாடி பவளம் வாசனைத்திரவியம் இவைகளும் இறக்குமதியாகியும்; உயர்ந்த விலைபெற்ற கற்கள், மிகவழகான துணிமணிகள், மற்றும் வஸ்திரவகைகள், தந்தம், கருங்காலிவயிரங்கள், மிளகு, பட்டு முதலிய பண்டங்கள் ஏற்றுமதியாகியும் வந்தன.

கி. பி. 3-வது நூற்றாண்டில், ரோமராஜ்யம் தளர்வடைந்தது. தளரவே, கான்ஸ்டான்டிநோபிள் துறைமுகமானது—முன்பு அலெக்ஸாண்டிரியா மூலம் நிகழ்ந்துவந்த—ஆசியா வியாபாரத்தில் பெரும் பகுதியைக் கவர்ந்துகொண்டது.

கிறிஸ்தப்தத்துக்கும் பிற்பட்ட நூற்றாண்டுகளில், இந்தியாவானது அடிக்கடி படையெடுப்புகளுக்கு உட்பட்ட நிலைக்களமாயிற்று. சித்தியரும் ஊணரும் இந்தியாவின் மேற்கு மாகாணங்களைக் கொள்ளையாடி அழிக்கலானார்கள். ஆனால், ஒரு சிறந்த மகாவீரனும், நம்பாஷாபிவிர்த்தி சம்பந்தமாகப் பிரஸித்திபெற்றவனுமாகிய விக்கிரமாதித்தியன் இவ்வந்நியப்படையெடுப்புகளை எதிர்த்து ஒழித்தான். அப்பால், கி. பி. 6-ம் நூற்றாண்டுமுதல் 10-ம் நூற்றாண்டுவரை, இந்தியா, அந்நியர் முற்றுகையிலிருந்து தப்பி இருந்தது. இந்தக்காலமத்தியிலேதான், பாஹியான் (Fa-Hian) ஹியூந்த்ஸாங் (Hionen-Tsang) என்ற சீனயாத்திரிகர்களும் மற்றும் அநேகரும், மதசம்பந்தமானவிஷயங்களை அறிந்துபோவதற்காக, நம்நாட்டுக்கு யாத்திரைவந்து; அப்போதிருந்த கைத்தொழில்களையும் நானாவிதநாகரிகக்கல்வித்துறைகளையுங் கண்டு வியப்படைந்ததோடு, ஒவ்வொரு நகரத்திலுமுள்ள இந்து தேவாலயங்களையும், அவற்றின் பக்கத்திலிருந்த பௌத்தப்பள்ளிகளையும் பற்றிக் குறிப்பெழுதியிருக்கிறார்கள்.

நம் இந்திய வியாபாரிகள் ஜாவாமுதலியதீவுகளிலும் குடியேறியிருந்தனர். "தமிரலிப்பட்டி" அல்லது 'தமிழுக்' என்ற துறைமுகத்திலிருந்து ஓர் இந்தியக்கப்பலில் ஏறித்தான், பாஹியான் தன் தேசநோக்கிப் புறப்பட்டது.

ஐரோப்பிய நாடுகட்குப்போய் அதன் முக்கிய நகரங்களில் சுற்றுப்பிரயாணஞ்செய்திருப்பவர்கள், ஜாவாவிலிருந்து டச்சுக்காரரால் எடுத்துக்கொண்டு போகப்பட்ட இந்துதெய்வவிக்கிரகங்களை லீடன் நகர்ப் பொருட்காட்சிச்சாலையிற் பார்த்திருக்கலாம். இந்தியாவிலிருந்து சென்ற வியாபாரிகளாலும் மற்றும் குடியேறியவர்களாலும் ஜாவாத்தீவில் இந்துமதம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவேண்டுமென்பது நன்றாகத்தெரிகிறது.

அந்தகாரகாலம் (Dark ages) முடிந்தபின்பு இந்தியவியாபாரத்துக்கு வேனிஸ் துறைமுகம் வியாபாரவழியாயிருந்தது. 15-ம் நூற்றாண்டு முடிவில் வாஸ்கோடிகாமாவால், ஆபிரிகாத்தென்கோடியிற் கண்டுபிடிக்கப்பட்ட புதுமார்க்கத்தின் மூலம் நடந்த வியாபாரப்பெருக்கால் அவ்வேனிஸ் வியாபாரமகிமை போயேவிட்டது. வேனிஸ் சீர்குலையவும் போர்ச்சுகல் (Portugal) பிரதாபத்திலும் வாணிபத்திலும் வளர்ந்தோங்கியது. 16-ம் நூற்றாண்டில், சீனதேசம் வரையுள்ள ஆசியாத் தென்கடற்கரை முழுதிலும் வியாபாரத்தலைமை போர்ச்சுகீசியரிடமேயிருந்தது. ஆனால், அடுத்த 17-ம் நூற்றாண்டில் டச்சுக்காரரே முன்னவர்வகித்த ஸ்தானத்தையடைந்து, இந்திய வியாபாரத்தால் தங்களை தனவந்தர்களாக்கிக்கொண்டார்கள். கொஞ்சக்காலம் கிரமித்து ஆங்கிலேயர்கள் அவ்வியாபார அரங்கில் ஆடத்தொடங்கினார்கள். தொடங்கி, 18-ம் நூற்றாண்டில், டச்சுக்காரரிடமிருந்து, அவர்கள் கீழைத்தேச வியாபாரத்தைப் பறித்துவிட்டார்கள். சென்ற ஆயிரவருஷக்காலத்துக்குள் ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு ஜாதியாரும் ஒருவர்பின் ஒருவராய்ப் பிரபல்யத்தையும் ஐசுவரியத்தையும் அடைந்தது கீழைத்தேச வியாபாரத்தாற்றான். பிராசீன காலத்தில், பெருத்த வியாபாரிகளான பினீஷியர்கள், அரபியர்கள் —இவர்கள் அடைந்திருந்த ஸ்தானத்தை, கான்ஸ்டான்டிநோபிள், வேனிஸ், போர்ச்சுகல், ஹாலந்து, இங்கிலாந்து முதலியதேசத்தார்

அடைந்து, விலையுயர்ந்த இந்தியக் கைத்தொழிற்பண்டங்களை ஒருவர் பின் ஒருவராய்க் கொண்டுபோனவர்களாயிருக்கிறார்கள்.

## இங்கிலாந்தின் வியாபாரச் சூழ்ச்சி.

18-ம் நூற்றாண்டில், இங்கிலாந்து இந்தியாவைக் கைப்பற்றத் தொடங்கியபோது, அது அயர்லந்துடனும் குடியேற்ற நாடாகிய அமெரிக்காவுடனும் செய்துவந்த வியாபார ஏற்பாடுகளையே, இந்தியா விஷயத்திலும் கைக்கொண்டது. அத்தேசத்தாரின் நோக்கமும் முயற்சியும் என்னவென்றால், தன்னைச் சார்ந்த நாடுகளிலிருந்தும் விளைபொருள்களை அப்படியே வாங்கிச்சென்று பின்பு அவற்றைக் கொண்டு தம்தேசத்துக்கைத்தொழிலை அபிவிர்த்தி செய்வதேயாகும். தம்முடைய கைத்தொழில்விருத்தி ஒன்றே கருதி, பிறநாட்டுச் செயற்கைப்பொருளின்பேரில் அக்கிரமத் தீர்வைகளை விதித்து அவற்றை ஒடுக்குவாராயினர். இந்நிலையில், குடியேற்ற நாடாகிய அமெரிக்காதேசம் தன் சுவாதந்தரிய சக்தியை வெளிப்படுத்தித் தனக்கு நேர்ந்த கைத்தொழிலடிமைத்தனத்தினின்றும் தன்னை நிவர்த்தித்துக்கொண்டது. ஆனால் அயர்லந்தும் இந்தியாவுமாகிய இரண்டுமே இவ்விதக்கஷ்டத்துக்குள் அகப்பட்டுக்கொண்டிருந்தன. இதனால், 19-ம் நூற்றாண்டில் இவ்விருதேசத்துத் தொழில்களும் சீர்குலைவாயின. ஆனால், இங்கிலாந்திலோ என்றால், அமோகமாய்க் கைத்தொழிற்சாலைகள் விருத்தியாயின. யந்திரநெசவுக்கருவி (Power-loom) கண்டுபிடிக்கப்பட்டபின் இங்கிலாந்தின் கைத்தொழில் வெற்றியானது பரிபூர்த்திபெற்றது.

அது முதற்கொண்டு, இங்கிலாந்து, நாளடைவில், நேர்மையும் நியாயமுமான வியாபார முறையைக் கைப்பற்றலாயிற்று. நாவாய் முறைச்சட்டங்கள் (Navigation Acts) பாரபக்ஷமான சரக்குத்தீர்வை (High Tariff) இவைகள் ஒழிபட்டன. இக்காலத்திலே, இங்கிலாந்தானது, உலகமுழுவதும் மேலான சுதந்திரவியாபார முறையைப்போதிப்பதாய் முன்னிற்கின்றது. இவ்விஷயமானது, தற்காலத்திலுள்ள நம இந்தியக்கைத்தொழிற் சரித்திரத்தைப்பற்றியும் பேசும்படி எனக்கு ஞாபிக்கிறது.

## தற்கால நிலைமை.

நீராவியாலும், மின்சாரசக்தியாலும் யந்திரோபாயம் அடைந்துள்ளவெற்றி எக்காலத்தும் ஞாபகத்தில் வைக்கத்தக்கது. உதாரணமாக, யந்திரத்தறிகள் விர்த்தியடைந்து, கைத்தறிகாரருடைய ஜீவனோபாயத்தை மெள்ள மெள்ளக் கைப்பற்றிக் கெடுத்துவிட்டதன்றோ! இந்தியாவில் பஞ்சுநெசவுத்தொழில்செய்த அநேகர், சென்ற பத்து வருஷத்துக்குள்ளேயே, 100-க்கு 23-குறைந்துவிட்டார்கள். மேலானயந்திரங்களாலே பருத்தியினின்று கொட்டை நீக்கப்பட்டும், பஞ்சுக்கட்டுகள் அழுத்தி இறுக்கப்பட்டும் வருவதால், அவ்விருதொழில்களையுங் கொண்டு பிழைப்பவர்களின் தொகை, சரியாய், 100-க்கு 8-விதம் குறைந்துவிட்டது. என்றாலும், மேற்கூறிய நெசவுத்தொழிலே, நவீனக்கைத்தொழில்முறைப்படி யுக்தியோடு சீர்திருத்தப்பட்டால், ஐரோப்பியச் செயற்கைப்பொருள்களோடும் போட்டி போடக்கூடும் என்று தெரிகிறது. பம்பாய் யந்திரசாலைகளில் தினந்தோறும் உத்தேசம் 170,000-கைத்தொழிலாளிகள் வேலைசெய்து பிழைக்கிறார்கள். மேலும், 30,000-க்கு மேற்கொண்ட பேர்கள் பருத்தியினின்று கொட்டைநீக்கும் பிரஸ்ஸுகளில் வேலைசெய்து ஜீவனோபாயந் தேடுகிறார்கள். ஏறக்குறைய 40-வருஷங்கட்கு முன் இந்தியாமுழுதிலும் மொத்தம் 13-பஞ்சியந்திரசாலைகளே இருந்தன. 1876-ல் 47-ஆயின. 1886-ல் 95 உம், 1895-ல் 155 உம், ஆக அது விருத்தி அடைந்தது. ஆனால், 1904-லிலோ அதன் தொகை 203-ஆயிற்று. இப்போதுள்ள பஞ்சியந்திரசாலைகள் இன்னும் அதிகமாகும். 40 வருஷங்கட்கு முன்னர் மொத்தம் 4000-யந்திர நெசவுத்தறிகளே இருந்தன. 1904-ம் வருஷம் 47,000 ஆயின. நெசவுத்தறிராட்டினங்கள், 40-வருஷத்துக்குமுன், 300000-க்குச் சற்றுக்குறைவாகவே இருந்தன. ஆனால், 1904-லிலோ 50-லக்ஷத்துக்கு மேலேபோயிற்று. இந்தத்தொகை, அபரிமிதமான லங்காஷயர் நெசவுத்தொழிற்கணக்கோடு ஒப்பிட்டுப்பார்த்தால், வெகு சொற்பமானதேயாகும் என்றாலும், அவ்விருத்தியானது, நாம் ஒழுங்கான நெசவுத்தேர்ச்சி அடைந்திருக்கிறோம் என்பதைக் காட்டுகிறது. அப்படிக்காட்டுவதோடு கூட, நம் நோக்கமும் நன்மையையும் அதுவாக

வே கொண்டு உழைத்துவருவோமானால், காலக்கிரமத்தில், இன்னும் அதிகமான தேர்ச்சியடையலாம் என்பதையும் அது குறிக்கிறது. நமது வருஷாந்தர நூற்புரியின் நிறை ஏறக்குறைய 600,000,000-ராத்தல் ஆகும். இந்த மொத்த நிறையில், 100-க்கு 30-நம்நாட்டுக் கைத்தறியாளரால் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறதென்பதைக் கேட்க சந்தோஷமே உண்டாகிறது.

கனவான்களே! இந்தியாவில் விவசாயத்துக்கு அடுத்து நிற்கும் பெரிய தொழிலாகிய யந்திரக்கைத்தறிகளில் அடைந்துள்ள அபிவிர்த்தியைக் குறித்து, ஒவ்வொரு இந்திய அபிமானியும் நியாயமாகவே பெருமை பாராட்டலாம். சென்ற இரண்டு வருஷங்களுள், அஹமதாபாத்திலும் பம்பாயிலும் தற்காலத்துச் "சுதேசியக்" கிளர்ச்சியாற்றான் புதிதாக அநேகயந்திரசாலைகள் கிளம்பின. சிறிய பரோடா ராஜ்ஜியத்திலுங்கூட, இந்த அபிவிர்த்தியை நிதர்சனமாய்ப் பார்க்கலாம். இதன் தலைநகரில், 20-வருஷங்களாக ராஜாங்கத்தில் ஒரு யந்திர நெசவுத்தறி ஸ்தாபிக்கப்பட்டு, ஜனங்கள் தாங்களே இவ்விஷயங்களினியற்கையை அறிதற்கு ஒரு முன்மாதிரியாகவும், மற்றக் கூட்டுவர்த்தகர்கள் இதையொத்த யந்திரசாலைகளை நடத்தும்படி தைரியப்படுத்தவும் ஆகிய இவ்விருநோக்கத்தைக் கொண்டே அது நடத்தப்பட்டு வருகிறது. இம்மாதிரியான வழிகாட்டியே பலவிடங்களிலும் பரவிப்பலனைக்கொடுக்கக்கூடியது. இதன் பலனாக, இப்போது ஒரு பிரத்தியேகக் கூட்டுக்கம்பெனியார் சேர்ந்து, இராஜாங்கத்திடமிருந்து அவ்யந்திரத்தை விலைக்கு வாங்கி அதிகிலாக்கியமான பயனோடும் அதை நடத்திவருகிறார்கள். சமீபத்திற்றான் மற்றொரு யந்திரமும் ஸ்தாபிதமாகி வேலைசெய்யச் சித்தமாயிருக்கிறது. மூன்றாவதாக ஒரு யந்திரசாலை இப்போதுதான் கட்டியாகின்றது. இதுவுமன்றி, பருத்தியினின்று கொட்டையெடுக்கும் யந்திரசாலைகளும் மற்றும் நீராவியந்திரசாலைகளும் ராஜ்ஜியமுழுதும் பலமடங்கு பெருகிவருகின்றன. மேலும், கைத்தறிகளின் தொகையும் சில பட்டணங்களில் இரட்டித்திருக்கிறது. இந்திய வியாபாரத்தில் எடுபடும் சாதாரண நூற்கண்டுகளில், பெரும்பாகம் இங்கேயே நூற்கப்பட்டனவாயிருக்கின்றன. ஆனால், வெகு சொற்பந்தான் அந்நிய

நாட்டிலிருந்து இறக்குமதியாகிறது. மேலான நம்பருள்ள நூற்கண்டு சம்பந்தப்பட்ட மட்டிலேதான் இங்கேயே நூற்கப்படுவது, அந்நியநாட்டிலிருந்து வரவழைக்கப்படுவதிலும் அதிகக்குறைவாயிருக்கிறது. இங்கே நெய்யப்படுவதைக்காட்டிலும் மஸிலின்துணியும் வினைய அணியாடைகளும் சொற்பக்கிரயத்துக்கு இறக்குமதியாவதோடுகூட, அத்துணிகள் வெகுவிசித்திரமானவையாயும், பலநிறங்கொண்டனவாயும், வெவ்வேறு வகைப்பட்டவாயும் இருக்கின்றன. கீழைத்தேசத்துக் கைத்தறிகள் முற்காலத்தில் நேர்த்தியான ஆடையழகிற் பேர்வாங்கினவைகளாயிருந்தபோதிலும், தற்காலத்தில் அவை, பெரும்பான்மை எடுபட்டே போய்விட்டன. அச்சடித்துணிகளும் சீட்டித்துணிகளும் பிரான்சு, இங்கிலந்து, ஜெர்மனி—இத்தேசங்களிலிருந்து நம்தேசத்திற்கு ஏராளமாக இறக்குமதியாகின்றன. இதேபண்டங்கள் இந்தியாவை ஒட்டிய நாடுகளிலும் பாரசீகத்திலும் ஆப்கானிஸ்தானத்திலும் மிகவும் விலைப்படுகின்றன.

## நெசவுத்தொழிற் பண்டங்கள்.

இவ்விதமாக, இதுவரைக்குமுள்ள நம்நெசவுத்தொழிலபிவிருத்தியைக்குறித்து நாம் பெருமைபாராட்ட இடமிருந்தாலும், நாம் இன்னும் அதிக ஊக்கத்தோடு நன்கு உழைக்கவேண்டுமென்பதற்கு அதிக நியாயமிருக்கின்றது. ஏனென்றால், நாம் இப்போதுதான் 'அபிவிருத்தி' யென்னும் முன்னணியிலிருக்கிறோம். சென்றவருஷம் நம் பஞ்சியந்திரசாலைகளினின்று உத்தேசம் 600,000,000-கஜம் துணி வெளிப்போந்தது. ஆனால் அந்நியநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதோ 2000,000,000-கஜம் துணியாகும். இப்பெருந்தொகையை உத்தேசிக்கின் நம்கைத்தொழிலடையவேண்டிய அபிவிருத்தியின் பேரளவை நாம் அறிந்துகொள்ளலாம். நாம், அந்நியநாடுகளுக்கு 213,000,000-ரூபா பெறலான பருத்தியனுப்பி, இந்தநெய்யப்படாத பருத்திக்குப்பிரதியாக 390,000,000க்கு துணிமணிகள் இறக்குமதிசெய்ய இடங்கொடுக்கிறோம். ஆகையினால் நம் இந்தியஜாதியார் தங்கள் ஆடைக்குவேண்டியிருக்கிற 4-ல் ஒரு பாகந்தான் தாமேபண்ணிக் கொள்ளுகிறார்களென்பது விளங்கும்.

*

நம்தேசத்தாருக்குப் போதுமான அளவு ஆடைநெய்யும்படியான திறமை உண்டாம்வரை நாம் திருப்தியடையக்கூடாது.

கனவான்களே! நான் முன்பு இந்தியாவின்பஞ்சுத்தொழிலைப் பற்றிக் கொண்ட அபிப்பிராயங்களையே நீராவியுபயோகத்தை வேண்டிநிற்கும் மற்றத்தொழில்களுக்கும் ஒருவாறு ஒப்பிடலாம். பங்காளத்தில் சணற்றொழில் (Jute industry) விசேஷமென்பது தெரிந்ததே. அத்தொழில் அங்கே வருஷாவருஷம் அதிகமாகிக்கொண்டே வருகிறது.—உதாரணமாக,—1895-ம் வருஷத்தில் 28-யந்திரங்கள்மாத்திரம் இருக்க, 1904-ல் 38-ஆனது. வட இந்தியாவிலும் பஞ்சாபிலும் ஆட்டுரோமத்தொழிற்சாலைகள் (Woollen factories) இருக்கின்றன. அவையுண்டாக்கிய கம்பளத்தின் மொத்தநிறை 1895-ல் $22\frac{1}{2}$- லட்சம் ராத்தலிலிருந்து 1904-ல் 35 - லட்சம் ராத்தலாயிற்று. பஞ்சுத்தொழிலில், இவ்வளவு சித்தியடைந்த நம்தேசத்தார் தங்கள் பஞ்சுத்தொழிலோடுகூடக் கம்பளி, சணல் முதலிய தொழில்களையும் பின்பற்றுவார்களென்று நான் நம்புகிறேன்.

## பட்டுநூற்றொழில்.

பட்டுநூற்றொழில் இந்தியாவின் அதிபுராதன கைத்தொழில்களில் ஒன்றாகும். ஆனால் அதுவும் மற்றப் புராதனகைத்தொழில்களைப்போலவே 18-ம் நூற்றாண்டிலும் 19-ம் நூற்றாண்டுத் தொடக்கத்திலும் அநுசரிக்கப்பட்ட அக்கிரமமான வியாபாரச் சூட்சியினால் தள்ர்ந்துபோனது: என்றாலும், அது விர்த்தியாகும் என்பதற்குச் சில சின்னங்கள் தோன்றுகின்றன. இந்தியாவின் அநேகபாகங்களில் தாஸார்ப்பட்டு (Tassar silk)நெய்யப்பெற்று ஐரோப்பாவுக்கு ஏற்றுமதிசெய்யப்படுகிறது. அசாமில் (Assam) பட்டுச்சிலைகளைத்தான் ஸ்திரிகள் உடுத்துகிறார்கள். ஒவ்வொரு குடும்பத்தாரும் தங்களுபயோகத்துக்குவேண்டிய பட்டுவஸ்திரங்களைத் தாங்களே நெய்துகொள்ளுகிறார்கள். பங்காளத்தில் விதைகளின் நயத்தைப் பரிசோதிப்பதற்கு (Testing of the seed) சிலசாஸ்திரீயமான முறைகளைக் கைக்கொண்டு நடத்தித் தொகுசம் பார்ச்சியடைந்திருக்கிறார்கள். பஞ்சாபில் பட்டுநூற்பூச்சிகளை விருத்திசெய்வதற்கென்று பலமுறை

எடுக்கப்பட்ட முயற்சியில் தக்க பலன் கிடைக்கவில்லை. காஸ்மீரத்தில் இத்தொழில் அத்தேயத்தை ஒட்டின தொழிலாயிருக்கிறது. அங்கே ராஜாங்கத்தார் அதைவிருத்திபண்ண முயன்றும்வருகிறார்கள். நவீன நாகரீகப்பயிற்சிபெற்ற ராஜ்ஜியமாகிய மைசூரில் (Mysore) இத்தொழிலைப்பற்றி அதிக சிரத்தையெடுக்கப்பட்டுவருகிறது. பரோடா ராஜ்ஜியத்தில் நான் என்றால் ஆனமட்டும் இத்தொழிலைப் பரப்பியும் அபிவிருத்திபண்ணியும் வருகிறேன். இந்தியாவில் 1904-ல் இந்தப்பட்டுயந்திரசாலை மொத்தத்தில் 11-ஆகும். ஆனால் ஏராளமானபட்டு கிரகங்களில் நூற்கப்பட்டும்வருகின்றது.

## மற்றக்கைத்தொழில்கள்.

கனவான்களே! இதுவரை நான் நெசவுத்தொழில்களைப்பற்றி மாத்திரம் சொல்லிவந்தேன். இந்தியாவிலுள்ள மற்றக் கைத்தொழில்களைக்குறித்து அதிகமாய்ப்பேச அவகாசமில்லை. ஆதிகாலந்தொட்டு,பித்தளை செம்புப்பாத்திரங்களே உபயோகப்பட்டுவருகின்றன. ஆனால் சமீபத்தில் ஐரோப்பாவின் விலைசரசமான எனாமலின் (Euamel) மிகுதியான விற்பனையாற்றான், அக்கைத்தொழில்களைப் பற்றிப் பயம் ஜனிக்கிறது. அலூமினியம் (Aluminium) என்னும் லோகத்தின் கைத்தொழில் புதிதாகக் கிளம்பியிருக்கிறது. சென்னையில், சாட்டர்டன் துரையவர்கள், அத்தொழிலை அதிகமாய் நம் தேசத்தில் விர்த்திபண்ணியதற்கு நாம் நன்றிபாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

சமீபகாலத்துப் பௌம்மியசாஸ்திர சிரேஷ்டர்களால் நடத்தப் பெற்ற பரிசோதனையில், மத்திய இந்தியாவிலே (Central India) இதுவரை கண்டுபிடிக்கப்படாதிருந்த விலைபெற்ற இரும்புக்கனிகள் வெளிக்கு வந்திருக்கின்றன. ஆகையால் இரும்புத்தொழில் விருத்தியாவதற்கு அதிக இடமிருக்கிறது. இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட இடங்களைத்தவிர மற்றும் அநேக இடங்களில் இரும்புக்கனிகளிருப்பதற்கு அடையாளமான ஓட்டக்குறிகள் (Veins) கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. என் நண்பரான கனம் தாதா (Mr. Tata) வால் ஏற்படுத்தப்பட்ட கம்பெனிகள்போல இன்னும் துணிந்துமுயலும்

சில கம்பெனியார் கிளம்பி இச்சுரங்கங்களை வெளிக்குக்கொண்டுவந்து நடத்துவார்களானால், அவர்களுக்கு வெகு நல்ல க்ஷேமகாலமாகு மென்பது திண்ணம். நம்தேசத்து நிலக்கரிகள் சுத்திசெய்யப்படுவதோடு (Refined), போக்குவரவுச் சாதனங்களும் இலகுவும்நயமுமாக ஏற்பட்டால், அந்நியதேசத்திலிருந்து ஏராளமான இரும்புப்பண்டங்கள் வரவழைப்பதைக்காட்டிலும், நம்தேசத்திலேயே உருக்கிவார்த்துக்கொள்வது அதிகலாபகரமென்று நன்கு தெரியலாம். கனம் தாதாவின் காரியமுறை (Scheme)ப்படி தகுந்த இரும்புக்கனியுள்ள இடத்தைக் கண்டுபிடித்த பேர்போன பௌம்மிய சாஸ்திரியாகிய (Geologist) பி. என். போஸ் என்பவரை இத்தொழிற் சங்கத்து வரவேற்கும் (Chairman of the Reception Committee) கமிட்டித்தலைவராக நீங்கள் தேர்ந்ததைக்குறித்து அதிக சந்தோஷப்படுகிறேன். தாதாவின் காரியமுறையைப்பற்றி இன்னும் அவர் குமாரர் யோசித்துவருகிறார். அவரை நான் சமீபத்தில் சீமையில் சந்தித்துச் சந்தோஷிக்கலானேன். 1904-ம் வருஷத்தில் இந்தியாவில் 89-இரும்புத் தொழிற்சாலைகள்தானிருந்தன; சமீபகாலத்திற்குள் அவை அதிகரிக்கும் என்றே நம்பலாம்.

## பங்காளத்து நிலக்கரிவிளைநிலம்.

நிலக்கரியுள்ள இடம் பங்காளத்தில்மிகுதியாயிருக்கிறது. 1904-ம் வருஷத்தில் இந்தியாமுழுதும் மொத்தம் எடுக்கப்பட்ட 2-கோடி ரூபா விலையுள்ள 80-லக்ஷம் இராத்தல் நிலக்கரியில், பங்காளத்திலேதான் 70-லக்ஷராத்தல் வெட்டியெடுக்கப்பட்டதாயிருந்தது. இந்தத் தொகைகள் உங்களுக்குப் பிரமாதமாகப் படலாம். ஆனால் இங்கிலாந்தில் ஒரு வருஷகாலத்தில் வெட்டியெடுக்கப்படும் 200,000,000-ராத்தலுள்ள நிலக்கரியை உத்தேசிக்கும்போது இந்த 80,000,00-ராத்தல் எந்தமூலை? தக்கமுதலோடும் சிறந்த சாஸ்திரமுறையோடும் இத்தொழில் நடைபெறவில்லையாயினும், நம்தேசத்தார் இந்நிலக்கரிச் சுரங்கங்களிலேயும் தொழில்செய்து பிழைக்கிறார்கள். இங்கிலாந்தில் அநுபவமுதிர்ச்சியோடுகூடிய நிலக்கரிச் சுரங்கவேலையைக் கற்றுவருப்படி சில இந்தியவாலிபர்களுக்கு இந்தியாகவர்ன்மெண்டார் உதவிச்சம்பளம் கொடுக்கிறார்களென்பது சந்தோஷத்தைத்தக்கொடுக்கி

றது. நிலக்கரித்தொழிலினால் ஆகும் முக்கியமேன்மை, யென்னவென்றால், நிலக்கரி விளைவு அதிகமாவது, மற்றக்கைத்தொழில்கள் பல்கிப்பெருகுவதற்கு முக்கியசாதகமாயிருக்கிறது. மற்றெல்லாக் காரணங்களைக்காட்டிலும், தற்காலத்தில் இங்கிலாந்தின்மேன்மைக்குக்காரணம் நிலக்கரியும் இரும்புமேயாகும்.

நீராவியின் உதவிகொண்டு செய்யப்படும் முக்கிய தொழிற்சாலைகளின் மொத்தத்தொகைகளும், மற்றக் கைத்தொழிற்சாலைகளின் விவரக்குறிப்பும் யாவரும் எளிதிலறிவதற்காக கீழே காட்டப்பட்டிருக்கின்றன.

| | சாலைகள். | ஞ 1895-ல் | ஞ 1904-ல் |
|---|---|---|---|
| 1. | பஞ்சியந்திரசாலை | 148 | 203 |
| 2. | சணற்சாலை | 28 | 38 |
| 3. | கம்பளிச்சாலை | 5 | 6 |
| 4. | பருத்தியினின்று கொட்டை நீக்குதற்கும் அது சுத்தி பண்ணப்படுதற்கும் பின் பஞ்சு அழுத்துவதற்குமான யந்திரசாலைகள். | 610 | 951 |
| (5) | மாஅரைக்கும் சாலை | 72 | 42 |
| (6) | அரிசியந்திரசாலை | 87 | 127 |
| (7) | சர்க்கரைச்சாலை | 247 | 28 |
| (8) | பட்டுநூற்சாலை | 89 | 75 |
| (9) | பட்டுநெசவுச்சாலை | 28 | 11 |
| (10) | தோல் பதனிடும் சாலை | 60 | 35 |
| (11) | எண்ணெய்ச்சாலை | 163 | 112 |
| (15) | அரக்கு மெழுகுச்சாலை | 138 | 128 |
| (16) | இரும்பு பித்தளைத்தொழிற்சாலை | 64 | 89 |
| (17) | அவுரிநீலத்தொழிற்சாலை | 8225 | 422 |

மேலேகாட்டிய தொகைகளை நீங்கள் பார்த்தமாத்திரத்திலே நம் தேசத்தில் நீராவியின் உதவியால் நடத்தப்படும் முக்கிய கைத்தொழில்களைக்கொண்டு நம் நிலைமையை யறியலாகும்.

சில கைத்தொழில்களில் மாத்திரம் (உதாரணமாக, நெசவுத் தொழிலை யெடுத்துக்கொள்ளலாம்) நாம் ஏதாவது கொஞ்சம் முன்னுக்கு வந்திருக்கிறோம் என்றும் நமக்குவேண்டிய மொத்தத்தேவையில் ஒருகாற்பாகமாவது நாமே செய்துவருகிறோமென்றும் நாம் அறிந்துகொள்ளலாம். கம்பளி, சணல்போன்ற கைத்தொழில்களில் நாம் ஏறக்குறையமுழுதும் ஐரோப்பிய முதலையும் முயற்சியையுமே எதிர்பார்த்திருக்கிறோம். நாமாகவே, இதுவரை அத்தொழில்களின் விஷயமாய் சிரத்தையாவது முயற்சியாவது எடுத்துவரவில்லை. சர்க்கரைத்தொழில், தோல்பதனிடும் தொழில் (Tanning) இரண்டையும் பத்துவருடங்களுக்குள் இழந்தேவிட்டோம். மேலும் இரும்பைப்பற்றியோசிக்குமிடத்து, நாம் சற்றுக்குறைய முழுதும் அந்நியரைச் சார்ந்திருக்கிறோம். நம் தேசத்துத் தொழிற்சாலைகளில் ஆக்கப்படுவதெல்லாம் நமக்குக் கொஞ்சந்தான் காணுகிறது. ஆகையால் நான் முன்சொன்னதையே வற்புறுத்திச சொல்லுகிறேன்:—

“நம் தொழில் இனி விர்த்தியாவதற்கு இடமிருக்கிறதென்றே நம்பலாம்; ஆனால் நாம் சந்தோஷப்படுவதற்கானபடி அவ்வளவு அபிவிருத்தியில்லை. இனிமேலாகவாவது நாம் ஊக்கத்துடன் இடைவிடாது உழைத்துவருவோமாகில் இத்தொழில்களில் அடையவேண்டிய சித்தியை நாமடையலாகும் என்பதற்குத் தக்க காரணங்களிருக்கின்றன.”

## அந்நிய முதலால் நடத்தப்படும் கைத்தொழில்கள்.

தற்கால நிலைமையைச் சுருக்கமாய்ச் சொல்லி முடிப்பதன்முன் ஒரு விஷயத்தைப்பற்றி நான் உங்கள் மனதில் அழுந்தவுரைக்க விரும்புகிறேன். அந்நியமுதல் சம்பந்தப்பட்டு நடத்தப்பெறும் யந்திரமூலத்தொழில்கள், தேயிலை அவுரி காபிமுதலிய மற்றத் தொழில்கள் இவைகளைப் பற்றி அதிக கவனம் செலுத்தவேண்டும். இப்போர்ப்பட்ட தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் கூலியாட்கள் அதிக சொற்

பமே. கைத்தொழிற் சனத்தொகையில் (Industrial population) அநேகம்பேர் நம்தேசத்துக்குரிய தொழில்களைப் பின்பற்றிவருகிறார்கள். அவர்கள் தத்தம் கிராமாந்தரங்களிலேயும் கடைகளிலேயும் உழைத்துவருகிறார்கள். நம் இந்தியா தற்காலத்தில் இருக்கிறபடியே எக்காலத்திலும் கிராமாந்தர கைத்தொழிற்றேசமாகவே இருக்கும் (Land of cottage industries). நூறாயிரக்கணக்கானபேர் யந்திரசாலைகளில் உழைத்துவர, கோடிக்கணக்கானபேர் தத்தம்குடிசைகளிலிருந்தே தொழில்செய்துவருகிறார்கள். யந்திரசாலைகளைப்பெருக்கி நம்நாட்டின் தொழிலாளிகளின் நிலைமையைப் பண்படுத்தலாம்—என்று எண்ணுகிற எண்ணம், நம்தேசத்தைவிட்டு 6000-மைலுக்கு அப்பாலுள்ளவர்கள் நினைக்கிற வீணான தப்பெண்ணமாகும். கனவான்களே! அம்முறையால் சாத்தியமேயாகாது. நம்தேசத்துக் கைத்தொழிலாளிகள் நிலைமையைச் சீர்திருத்தம்பண்ண உண்மையாகவேநினைப்பவர்கள், தொழிலாளிகள் தத்தங்குடிசைகளிலிருந்துகொண்டே உழைக்கத்தக்கபடி ஓர்முறை கண்டுபிடித்தாற்றான் அவர்கள் எண்ணம் முற்றுப்பெறும். நாடுநகரங்களில் நெசவுத்தொழிலைக் கைப்பற்றியும், தத்தம்குடிசைகளிலிருந்தே பித்தளைப்பண்டம், தாம்பிரப்பண்டங்களைச் செய்தும் தம்முன்னோர் வழக்கப்படி அவரவர் தொழிலைக்கைப்பற்றிவரும் ஏழைக்குயவர்களையும், கொல்லர்களையும் தச்சுவேலைசெய்வோரையும் நாம் பாதுகாத்துத் தக்கவுதவிபுரிந்துவரவேண்டும். மேற்குறித்தவர்களே (விவசாயம்செய்து பிழைப்பவரல்லர்: அல்லதுயந்திரசாலைகளில் தொழில் செய்து பிழைப்பவரல்லர்) இக்காலத்தில் போதுமானபடி ஜனங்களது உதவியின்றிப் பஞ்சத்தில் முதலில் அடிபட்டு முழுகுகிறவர்கள். கனவான்களே! தற்காலத்திற் பிரபலமாயிருக்கும் 'சுதேசக்கிளர்ச்சி'யானது, இதுவரை கவனிக்கப்படாமல் அலக்ஷியஞ்செய்யப்பட்ட மேற்குறித்தத்தொழிலாளிகளுக்கு ஒரு ஜீவனோபகாரமாயும (சொற்பகாலத்துக்குள்ளேயே நாம் உணரக்கூடியவளவு அக்கிளர்ச்சி நம்தேசத்துக்கு நன்மை செய்திருக்கிறதென்றே நம்புகிறேன்) அவர்கள்செய்யும் கைத்தொழில்களை முன்னுக்குக்கொண்டுவந்து, அபிவிருத்திசெய்யக்கூடியதாயும், தக்கவேலை கிடைக்காமல் கஷ்டப்படும தொழிலாளிகளுக்கு அது பரமோபகாரமாயுமிருக்கும் பக்ஷத்தில், அச்சுதேசக்கிளர்ச்சியில் எனக்குள்ள

அபிமானம் இவ்வளவு அவ்வளவு ஆகாது. பெருங் கைத்தொழில்களை தக்கஉதவிபுரிந்து முன்னுக்குக்கொண்டுவருவதோடுகூட சாமான்ய கீழ்த்தரத்தொழில்களில் உழைக்குந்தொழிலாளிகளையும் தூக்கிவிடுங்கள். நீங்கள் அப்படிச்செய்வீர்களானால் கோடிக்கணக்கான கீழ்த்தரத்தொழிலாளிகளும், பொதுவாய் நம்தேசத்தாரும், ராஜாங்கத்தாரும் உங்களையும் உங்கள் முயற்சியையும் ஆசீர்வதிப்பார்கள்.

## கஷ்டங்களும் அவைகளை யெதிர்த்துவெல்லுமுறையும்.

கனவான்களே! இவைகளையெல்லாம் சொல்லிமுடித்ததால் நமக்கு இடையிலுறும் கஷ்டங்களைக்கவனிக்கவில்லையென்றாவது அவைகள் எறக்குறைய ஒழிந்தனவென்றாவது எண்ணமுடியாது. நாம் சென்ற இரண்டுநூற்றாண்டாக இழந்தஇடத்தைப் பின்னும் கைப்பற்றவேண்டும். நாம் கைத்தொழில்விஷயங்களில் பரிசயம் அதிகமில்லாமலும் தரித்திரராயுமிருந்துகொண்டே மிக்கதனவந்தர்களோடும் அத்தொழில்களில் அதிகப்பயிற்சியடைந்தவர்களோடும் சாமர்த்தியசாலிகளோடும் போட்டிபோட வேண்டியதாயிருக்கிறது. நாம் பழையமுறையோடு புதுமுறைகளிலும்பழகிப் புதிதாய்க்கண்டுபிடிக்கப்பட்ட நவீனமாதிரிகளை நன்றாய் அறிந்துகொண்ட பின்னரே இந்த நூதனவழிகளைக்கண்டுபிடித்த ஜாதியாரை நாம் வெல்லவேண்டியிருக்கிறது. இதை எதற்கு ஒப்பிடலாம் என்றால், தாங்களே கண்டுபிடித்த ஆயுதத்தில்பயிற்சியிருந்த மேனாட்டுஜாதியாரோடு நாம் இதுவரை பழகாத அதே ஆயுதங்களைக்கொண்டு அவர்களை யெதிர்த்து வெல்லவேண்டியதுபோலும். நம் நாட்டில் தாழ்நிலையிலிருக்கும் யந்திரோபாயத்தைக்கொண்டு இங்கிலாந்து ஜெர்மனி ,அமெரிக்கா முதலிய அந்நியதேசங்கள் நம்தேசத்தில் மிகுதியாகப்பெருக்குகின்ற அந்நியச்சரக்குவெள்ளத்தைத் தடுக்கவேண்டியிருக்கிறது.

ஆகையால், நம் கைத்தொழில்கள் அந்நியநாட்டுக்கைத்தொழிற்பெருக்கமிகுதியால் அழிந்துபோமோ என்றபயம் ஜனிக்கின்றது. பழையமுறைகளையும் தொழில்களையுமே அநுசரித்துவந்தால் கட்டாயம் அவை இறந்தேபோகும். ஆகையால் சுதேசக்கிளர்ச்சியாலேயே நீங்கள் மேற்குறித்த நியாயத்தையறிந்து கொள்ள

வேண்டும். நீராவி மின்சாரசக்திகளினால் போக்குவரவுச்சாதனங்கள் இலகுவாயும் நயமாயும் ஏற்பட்டு அந்நியநாட்டுச்சாமான்கள்வந்து உங்கள் சொந்த சாமான்களை அமுக்கி அவைகள் முன்னுக்குவந்திருப்பதைப் பார்த்தாவது நீங்கள் அதிவிரைவில் எழுந்து, சிறந்த யுக்தியோடும் சாமர்த்தியத்தோடும் தக்கமுறைகளை அநுசரித்து இம்மாதிரியான அந்நியக்கொள்ளையை நிறுத்தமுயலுங்கள். இயற்கையில் அமைந்துள்ள சக்திகளை ஒருங்கு திரட்டவும் அவைகளின் மர்மத்தையறியவும் முயலுங்கள். அச்சக்திகளைப் பலவிதமாகத் தக்கபடி உபயோகியுங்கள். அச்சக்திகள் மனிதனுக்குத்தொண்டூழியம் செய்யும்படி அவற்றைப் பலபடியாகவும் திருப்புங்கள். கைக்குட்பளுவானவேலைகளை அவைமூலமாய் இலகுவில் செய்யும்படி யுக்தியையுபயோகியுங்கள். புத்திசாலிகள் முதலாளிகள் ஊக்கமுடையவர்கள் செய்யும்வேலைக்கும் அப்படியல்லாதவர் செய்யும் வேலைக்கும் தாரதம்மியம் யாவருக்கும் தெரிந்ததே. ஒருங்கு சேர்ந்து உழைக்கக் கற்றுக்கொள்ளுங்கள். காலத்தை வீண்செலவு செய்யாதீர்கள். பணத்தை லாபத்துறைகளில் உபயோகிக்க முயலுங்கள். உங்கள் முயற்சிகளையெல்லாம் ஒருங்குகூட்டினால்தான் சீக்கிரம் தேர்ச்சியடையலாம்.

## சுதேசீயம்.

மேற்குறித்த நிலைமைகளை உத்தேசிக்க 'சுதேச அன்பு' தேசத்தின் தற்காலதரித்திரநிலைமையை நீக்குவதற்குக் கிரமமானகருவியாகும். அதை நன்றாயுணர்ந்து வேலைசெய்தால் அதனால் அடையும் நன்மை அபரிமிதம். சுதேசத்தொழில்களை விர்த்தியாக்குவதென்ற ஊக்கத்தோடு கூடிய 'சுதேசக்கிளர்ச்சி'யில் ஒருகுற்றமுமில்லை. உண்மையானசுதேசியாரென்றால், சொற்பவிலையில் அதிகசாமான் செய்ய முயல்பவனே. ஒவ்வொருவனும் சுதேசாபிமானத்தைமேற்கொண்டு, ஆரம்பத்தில்சுதேசசாமான்களை வாங்குவதாலுண்டாகும் அதிகவிலையையும் சிற்சில அசௌகரியத்தையும் பொறுத்துக் கொள்ளவேண்டும். ஆனால், தேசாபிமானக்கிளர்ச்சி எவ்வளவுபலமாகவிருந்தாலும், நாளடைவில் சுதேசச்சாமான்கள் நல்ல நிலைமையையடைந்து மற்ற அந்நியநாட்டுச்சாமான்களின் உயர்ந்தமாதிரியைக் கொண்டா லொ

ழிய நிலைத்துநிற்க முடியாது. நீங்கள் அப்படிச்செய்தால்தான் உங்கள் 'சுதேசக்கிளர்ச்சி'யாகிய கருவியினால் வெல்லச்சாத்தியமாகும்.

## இந்தியக் கரும்புச்சர்க்கரைத் தொழில்.

மேற்கூறிய கஷ்டங்களினால் நம்தொழில்கள் தத்தம் நிலைகெட்டுப்போய் பரிதாபமான கேவலநிலைமையிலிருக்கின்றனவென்பதற்கு ஒரே திருஷ்டாந்தம் போதும். இந்தியக்கரும்புச்சர்க்கரை (Cane-sugar) ஏற்றுமதி நின்றேபோய்விட்டது ஜெர்மானியா, ஆஸ்திரியாவிலிருந்து இறக்குமதியாகும் ஒருவகைக் கிழங்குச்சர்க்கரை (Beet-root sugar) நம்நாட்டுச் சர்க்கரையை ஓட்டிவிட்டது. அந்நியநாட்டுச் சர்க்கரையின்மேல் அதிகந்தீர்வைகள் (Import duties) போடப்பட்டிருந்தும், தீர்வையின்றியிருக்கும் நமது சர்க்கரை வியாபாரத்தை, அது இங்குவந்து அழித்துவிட்டதைக்கவனிக்க ஆச்சரியத்தைக்கொடுக்கிறது. இதற்குக்காரணந்தேட எங்கும்போகவேண்டுவதில்லை. நம்மிடந்தானிருக்கிறது. அந்நியரது சட்டங்களால் ஏமாற்றங்கள்திருத்தப்படலாம். அந்நியச்சரக்குகளின்மேல் போடப்படும் தீர்வைகள், அத்தொழில்கள் வளர்ந்து ஓங்கும்படி அவ்வத்தேசங்களது கவர்ன்மெண்டார் கொடுத்துதவும் ஏராளமான போஷணைப்பணமிகுதியை (Bounties) ஒருவாறு எதிர்க்கலாம். ஆனால், நம் தொழிலாளிகள் தம்நிலைமையை உத்தேசித்து மோசமுறைகளை அநுஷ்டித்தால் அவற்றையெப்படிச்சீர்திருத்தஞ் செய்யலாகும்? இந்தியச்சர்க்கரை அதிகமாகத்தேசத்துக்கு வேண்டியிருக்கிறது என்றாலும், அந்நியநாட்டார் ஏராளமான உதவி புரிந்து போஷித்துவரும் கிழங்குச்சர்க்கரையின் (Beet-root sugar) (சரசமான) விலையை உத்தேசித்து நம் சர்க்கரை நம் தேசத்திலேயே அதிகமாக வாங்கப்படுவதில்லை. நம் தேசத்தில் கரும்பினின்று சர்க்கரைச்சாற்றை முற்றும் இறக்கும்முறை சரிவர இல்லாததினால், அதிகக்கரும்பு நஷ்டமாகின்றது. நூதனமுறைகளை அனுஷ்டிக்காது, பழையமுறைகளையே மூடத்தனமான பழக்கத்தோடு செய்துவருவதை நிறுத்தவேண்டும்.

## சென்னையில் பதனிடும் தொழில்.

தக்கயந்திரங்களைக்கொண்டு நூதனமுறைகளை யநுசரிக்காத குற்றத்தினால், சென்னையில் தோல்பதனிடும் தொழில் (Tanning)

அழிந்துவிட்டது. இந்தியாவில் பதனிடப்படும் தோலைவாங்குவதைவிட அமெரிக்காவில் நவீனமுறைகொண்டு நன்றாகப்பதனிடப்படும் தோல் விலை சரசமாயும் நேர்த்தியாயுமிருக்கிறது. இதுபோல, நீலவகைகளும் கீல் எண்ணெயும் இப்போது ரசாயனசாஸ்திர உதவிகொண்டு (Synthetic chemistry) செய்யப்பட்டு அவை சம்பந்தமான விவசாயத்தைத் தாழ்த்திவிட்டன. விலை அதிகசரசமாகி உலகமுழுதும் ஜெர்மனியின் நீலச்சரக்குப்பரவியிருப்பதால் பங்காளத்து அவிரி நீலவியாபாரம் அதிகமாய் இறங்கிவிட்டது. 1895-ம் வருஷத்தில் 53,000,000-க்கு விலையான அவிரிஏற்றுமதியானது, 10-வருஷம் கழித்து 6000000-க்கு இறங்கினதோடுகூட அதன் பிறகும் அது அதிகக்ஷீணதசையை யடைந்து வருவதானது அதிகவருத்தத்தைக் கொடுக்கிறது. 1905-ல் 75-லட்ச ரூபாவுக்குக்குறையாதபடி சாயவகைகள் ஜெர்மனி, பெல்ஜியம், ஆலந்து முதலிய இடங்களிலிருந்து இங்கே இறங்குவதால், அத்தொழில்களைச்சார்ந்த இந்தியசாயக்காரர்களது பிழைப்பை முற்றும் ஒழித்துவிட்டது.

ஆகையால், நம்தேசத்துக் கைத்தொழில்களின் அபிவிருத்திக்குத்தகுந்த சாதனங்களைப்பெருக்கியும், நமது எளிமைத்தனத்தை நீக்கும்படியான முயற்சிகளைச் செய்தும் வரவேண்டியது அவசியம். இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதிக்கணக்கிலிருந்து நாம் அநேக விஷயங்கள் படித்துக்கொள்ளலாம். அக்கணக்குகளிலிருந்து அறியப்படுவதென்னவென்றால், (1905-ம் வருடம் சம்பந்தப்பட்டமாத்திரத்தில்) நம்தேசத்துத் தக்கதொழிலாளிகளுக்குப் பயன்படாமலும் இந்திய முதலைக்கொண்டு நடத்தி நாம் பிரயோசனமடையாமலும் 100க்கு 69-பங்கு விளைபொருள்களை அப்படியே ஏற்றுமதி செய்திருக்கிறோம். அதேவருஷத்து மொத்த இறக்குமதிக்கணக்கைக் கவனித்தால் 100-க்கு 59-பங்கு அந்நியக்கைத்தொழிற் சாமான்களாகும். அந்நியரே இவற்றின்முழுப்பிரயோசனத்தையும் அடைந்துவருகிறார்கள். ஒருதேசத்தின் கைத்தொழிலபிவிர்த்தியை அறியவேண்டுமானால், அத்தேசத்துக் கைத்தொழிற் பண்டங்களின் ஏற்றுமதிக்கும் அவ்வாறே அங்கிருந்து வெளியேறும் விளைபொருள்களின் ஏற்றுமதிக்குமுள்ள தாரதம்மியங்களையும், அந்நியநாட்டிலிருந்து அத்தேச

த்தில் இறக்குமதியாகும் மற்றைநாட்டு விளைபொருள் செயற்கைப் பொருள்களின் தாரதம்மியங்களையுங்கொண்டு தெளியவேண்டும். ஒரு தேசம் தன் கைத்தொழிற்பண்டங்களை அதிகமாக ஏற்றுமதி செய்தும் அந்நியதேசங்களிலிருந்து அவற்றின் விளைபொருள்களை அதிகமாகப்பெற்றும் வந்தால், அவற்றின் மூலம் அத்தேசத்தின் கைத்தொழிற் செழிப்பையும்; அது தன்னாட்டு விளைபொருள்களை அந்நிய தேசங்கட்கு அதிகமாக ஏற்றுமதிசெய்தும், மற்றைய நாடுகளிலிருந்து கைத்தொழிற்பண்டங்களை இறக்குமதியாகப்பெற்றும் வந்தால், அந்நாட்டின் கைத்தொழிலின் கேவலநிலைமையும் நாம் அறியலாகும்.

மேற்குறித்த ‘தேசத்தொழினிலைவிதி’ யாவரும் நம்பத்தகுந்ததொன்றேயாம். இந்தியா மற்றைய தேசங்களோடு செய்யும் வியாபார முறையில் கவனிக்கவேண்டிய ஒரு துக்ககரமான விஷயம் என்னவென்றால், அதன் இறக்குமதியைவிட பலமடங்கு அதிகமாய்க்கொண்டே வருவது அதன் ஏற்றுமதி என்பதே.

நாம் அந்நிய முதலுக்கும் முயற்சிக்கும் மிகவும் அதிகமாக அடிமைப்பட்டிருக்கிறோம். நமது இருப்புப்பாதைகள் ஐரோப்பிய முதல்கொண்டு நடத்தப்பட்டுவருகின்றன. அமெரிக்கா சாஸ்திர நிபுணர்கள் (Savants from America) நம் சுரங்கங்களைக் கண்டுபிடித்து அதினின்றும் அபரிமிதமான ஆதாயத்தையடைகிறார்கள். தினந்தோறும் நம் கிரகத்துக்குவேண்டிய சாமான்களுக்கும் அந்நியக்கைத்தொழில்களையே எதிர்பார்த்திருக்கிறோம். நாம் உண்டு உடுப்பதும், பெருக்கி மெழுகுவதும், கண்டுகளிப்பதும், சுகிப்பதும் ஊர்ந்துலாவுவதுமான சௌகரியங்களையடைவதற்கு அந்நியத்தொழிலாளிகள் கையை நாம் எதிர்பார்த்தவர்களாயிருக்கிறோம். தற்காலத்தில் நம் கைத்தொழில்களிருக்கும் நிலைமையைச் செங்குத்தான ஒரு மலையின் உச்சி ஓரத்திலிருக்கும் வஸ்து ஒன்றுக்கு ஒப்பிடலாகும். ஆகையால், நம் கைத்தொழில்கள் விழுந்து சிதைந்துபோகுமோ என்ற பயம் பிறக்கிறது. இவ்விதபயங்கர நிலைமையினின்றும் நம் கைத்தொழில்களைக்காத்து அவற்றிற்காக மேனாட்டையே எதிர்பார்க்கும் அடிமைத்தனத்திலிருந்து தேசத்தை எப்படி மீட்பதென்று யோசித்து நிர்த்தாரணம் செய்யவேண்டிய பிரசினை

நம்முடைய கவனத்தையும் சிரத்தையையும் பொறுத்ததாகவிருக்கிறது. இவ்விதமாக நம் கைத்தொழிலடைந்துள்ள நோய்க்கு ஒரு தக்க பரிகாரத்தைக்கண்டுபிடிக்க ஒவ்வொரு சுதேசாபிமானியும் ஒவ்வொரு ராஜதந்திரியும் கவலையோடு எண்ணுவாராயினர். கனவான்களே! இவ்விஷயத்தைக்குறித்துத் தக்க ஊக்கமான முயற்சியை முன்னமே யெடுத்திருக்கிறீர்கள். ஆகையால் வெகுசீக்கிரத்தில் அபிவிருத்திபெறக்கூடியதும் யானறிந்ததுமான கைத்தொழில்களின் பேர்களைமாத்திரம் சொன்னால் போதும். அவையாவன:—

1. நெசவுத்தொழில்.
2. தச்சுவேலை, மற்றுமுள்ள மரவேலை.
3. இரும்பு, செம்பு, பித்தளைத்தொழில்.
4. தங்கம், வெள்ளி, மற்ற நகைவேலை.
5. சிற்பம், மற்றக்கல்வேலை.
6. குடம்வனைதல், செங்கல் ஓடு வேலைகள்.
7. சாயத்தொழில்.
8. தோல்பதனிடும் தொழில்.
9. கயிறுபின்னல்.
10. பிரம்பு, மூங்கில்வேலை, பாய்பின்னல்.
11. கண்ணாடிவேலை.
12. கடைசற்றொழில், அரக்குத்தொழில்.
13. கொம்பு, தந்தம், சித்திரக்கொத்துவேலை.
14. சித்திரத்தையல்வேலை(Embroidery.)
15. சர்க்கரைச்சுத்தித்தொழில் (Sugar refining.)
16. புகையிலை பதமிடுதொழில் (Tobacco curing)
17. எண்ணெயிறக்கும், மா அரைக்கும் தொழில்.

மேற்கூறிய தொழில்களில் நமதேசத்தில் அதிகமாய்ச்செலவாவதும் இதுவரை அந்நியதேசங்களுக்குக் கப்பல்கப்பலாய் அனுப்பி அங்கே அவற்றைக்கொண்டு செய்யப்பட்ட தொழிற்சாமான்களில் இங்கே அதிக் இறக்குமதியாவதுமான கைத்தொழில்களை ஆரம்பத்தில் நாம் எடுத்து நடத்தலாம். நாம் இயற்கைப்பொருள்களை ஏராளமாக ஏற்றுமதிசெய்வதை நிறுத்தித் முற்றியகைத்தொழிற் பொ

ருள்களை ஏற்றுமதிசெய்ய முயலவேண்டும். 1905-ல் நாம் 106000000 ரூபா பெறத்தக்க எண்ணெய்விதைகளை ஏற்றுமதிசெய்து 22000,000 ரூபா பெறலான எண்ணெயை இறக்குமதியாகப் பெற்றோம். சென்ற வருஷத்துக் கணக்குப்படி பம்பாய் ராஜதானியிலுள்ள எண்ணெய்ச்சாலை 76-தொழிலாளிகளுக்கு மாத்திரமே வேலைகொடுத்தது. சென்ற 10-வருஷகாலத்துக்குள் எண்ணெய் இறக்கும் யந்திரங்கள் 100-க்கு 47 குறைந்தன. ஏனென்றால், நம்தேசத்தில் நயமற்றதும் புராதனமுமான முறைப்படி எண்ணெயிறக்குவதைக் காட்டிலும் அந்நியநாடுகளுக்கு எண்ணெய்விதைகளை ஏற்றுமதிசெய்து அங்கிருந்து இறக்கப்பட்ட எண்ணெயை இறக்குமதியாகப்பெறுவது லாபமென்று காணப்படுகிறது. ஆனால் ஒருவிஷயம் கவனிக்கத்தக்கது. டாக்டர் வீல்கர் (Dr. Voelcker) குறிப்பிட்டுச்சொன்னபடி, எண்ணெய் விதைகள் முழுவதையும் ஒரு தேசத்தினின்று ஏற்றுமதிசெய்வது அத்தேசத்தின் நிலவளத்தையே ஏற்றுமதிசெய்ததாகும்.

## நம் தொழில்களின் கேவலநிலை.

ஒவ்வொரு வருஷமும் நாம் ஏராளமான கோதுமையையும் மற்றதானியங்களையும் ஏற்றுமதிசெய்துவர அவை அந்நியநாட்டுயந்திரங்களில் மாவாகத்திரிக்கப்பட்டு இங்கே இறக்குமதியாக, அவற்றை உபயோகிக்கிறோம். சென்ற வருஷாந்தக்கணக்குப்படி பம்பாய் ராஜதானியிலுள்ள கோதுமைமா யந்திரங்கள் (Wheat flour mills) 78 கைத்தொழிலாளிகளுக்கு மாத்திரம் வேலைகொடுத்ததாகத் தெரிகிறது. மேற்குறித்த விஷயம் நம் கைத்தொழில்களின் கேவலநிலைமையையும் அவைகளுக்கு ஏற்பட்டிருக்கும் சஷ்டநிஷ்டூரங்களையும் விளக்குவதற்குத் தக்கசான்றாம். இவ்விடையூறுகளை யெதிர்த்துச் சென்று வெல்ல, நீங்கள் யோசித்துமுயலவேண்டும். நல்லநோக்கமும் அநுதாபமுமுள்ள கவர்ன்மெண்டார் தக்க சட்டங்கள் ஏற்படுத்தி உங்கள்முயற்சியை ஊக்கி உங்களை முன்னுக்குக்கொண்டுவரவேண்டியது அவர்கள் கடமை.

நான் நான்கு வருடங்களுக்குமுன் அகமடாபாத்தில்(Ahmedabad) சில குறிப்புரைகள் கூறினேன். அவற்றை உங்களுக்குத்திரும்பவும் இப்போது சொல்லுகிறேன்.

"பஞ்சமும், மேன்மேல விர்த்தியாகும் எளிமையும், அதிகமாய்ப்பரவும் வியாதிகளும்—இவையெல்லாவற்றிற்கும் காரணமாய் நம் முறையில் (System) ஏதோ ஓர் ஊழல் இருக்கிறது. ஆகையால் உடனே அதைப் பரிகரிக்கச் சில காரியம் செய்யப்படவேண்டும். ஆனால் இதைக்காட்டிலும் மேலான விஷயம் ஒன்றிருக்கிறது. அது நம்தேச நிலையைப்பற்றிய முக்கியமான பிரசினையாம். அதைவிள்ளுதற்கு இதுதான் கடைசித்தருணம். நீங்கள் முயற்சிசெய்யாது தவறுவீர்களானால் ஒருகாலமும் நன்மைகிடையாது. வரவரத் தரித்திரராயும் பலமற்றவராயும் ஆவோம். மேன்மேல் அந்நியநாட்டாரையே சாரவேண்டியதாயிருக்கும். கைத்தொழிற் சுவாதீனத்தை (Industrial independence) வெகு ஜாக்கிரதையோடு காத்துவரவேண்டும்: அப்படியில்லாமல் அது தளர்ந்து அழியநேரிடுமாயின் நம்மையாளவரும் எந்த அந்நியஜாதியாருக்கும் கேவலம் மரம்வெட்டுபவராயும் தண்ணீர் எடுத்துக்கொடுப்பவராயும் ஊழியம்செய்யும்படிதான் நேரிடும்.

"ஆகையால் கைத்தொழிலை அபிவிருத்திபண்ணி அந்நியநாட்டாரைச் சார்தலாகிய அடிமைத்தனத்திலிருந்து விடுத்துக்கொள்ளுங்கள். அப்படிச்செய்ய முயல்வீரேல் நீங்கள் முற்காலத்தில் அடைந்திருந்த உன்னதநிலைமையைச் சீக்கிரத்தில் பெற்று முதற்றரஜாதியாரோடு நீங்களும் வைத்து எண்ணப்படுவீர்கள்."

மேற்கூறியவைதாம், நான் அகமடபாத்தில் கூறிய மொழிகள். நான் அவற்றைத்திரும்பவும் இப்போது உரைத்ததற்குக்காரணம், நான்கு வருடங்களுக்கு முன் அதன் முக்கியத்தை நாமுணர்ந்திருந்ததைக்காட்டிலும் இப்போது ஒருவாறு அதிகமாய் அறிகிறோம் என்பதே. நாம் நம்தேசத்துச் சரித்திரத்தின் முக்கியமான தறுவாயொன்றில் நிற்கிறோம். தூக்கத்தினின்றும் எழுந்து சுருசுருப்புடனும் ஐக்கியத்துடனும் ஒத்துழைத்து நமது கைத்தொழிற் சுவாதீனத்தை அடையவேண்டியகாலம் கிட்டுகிறது. தவறினால் அநேக நூற்றாண்டுகளுக்கு அமுங்கிக்கிடக்கவேண்டியதுதான். நாம் இப்பொழுதே கைத்தொழிலில் முன்னடைந்திருந்த சுவாதீன நிலைமையைப் பாடுபட்டுழைத்தேனும் திரும்பவும் அடையமுயலவே

ண்டும். தவறினால் நாம் நமது சந்ததியாருக்குச் செய்யவேண்டிய கடமையை மறந்து துரோகம்பண்ணினவர்கள் ஆவோம்.

இப்படிக்கூறுவதால், நமது தற்கால நிலைமையை வீணாகப்பிரமாதப்படுத்தி உரைத்ததாக எண்ணமாட்டீர்கள் என்று நிச்சயிக்கிறேன். நாமே நம்மை ஆழ்ந்துபோகும்படி செய்துகொண்டதற்குக் காரணமான அந்நியக்கைத்தொழில் அடிமைத்தனத்தினின்றும் நம்மை இந்தத்தக்க தருவாயிலேயே மீட்பித்து சுவாதீனப்படுத்திக்கொள்ளாவிட்டால், நமக்கு இனிமேல் விமோசனமில்லையென்று நான் உணருவதுபோல் நீங்களும் உணருவது திண்ணம். நான் முன் உரைத்தபடி இதுவே கடைசியான தக்கதருணம்.

## பொருட்காட்சிச் சாலைகளும் அவற்றையொட்டிய சங்கங்களும்.

மேற்கூறிய இரண்டும் வித்தியாபிவிருத்தி விஷயமாய்த் தக்க பலனைக் கொடுத்திருக்கின்றன. கனவான்களே! இனிமேலாக, நீங்கள் இது விஷயமாய் எடுத்திருக்கிற முயற்சியைப்பற்றியும் அம்முயற்சி பூர்ணபலனைக்கொடுக்கக்கூடிய முறைகளைப்பற்றியும் சில விஷயமே கூறலாம் என்று நினைக்கிறேன். நம்தேசத்துக் கைத்தொழிற்சரிதத்தின் ஒரு முக்கிய காலத்தில், நமது 'நாஷனல் காங்கிரஸ்' (Indian National Congress) வருஷா வருஷம் கூடும் போது இந்தியாமுழுமையுமுள்ள கைத்தொழிற் பொருட்காட்சிச் சாலையையும் சேர்த்துவைத்துக்கொள்ளவேண்டுமென்று எண்ணின எண்ணம் மிகவும் சிறந்ததே. ஆரம்பமுதற்கொண்டே இந்தியாகவர்ன்மெண்டாரும் மாகாணக்கவர்ன்மெண்டாரும் மேற்கூறிய 'பொருட்காட்சிச்சாலைகள்' நன்றாய் முற்றுப்பெறும்படி தங்களால் ஆன உதவிகளைச்செய்தார்கள். மேலும் இம்முக்கியவிஷயத்தில், இந்துக்களும் மகம்மதியரும் ஆங்கிலேயரும் பார்சிகளும் நானாவிதவியாபாரிகளும் கைத்தொழிலாளிகளும், உயர்ந்த வித்தியார்த்திகளும் செல்வ ஜமீந்தார்களும் மற்றுமுள்ளவர்களும் சேர்ந்து ஒத்துழைத்திருக்கிறார்கள். மேற்கூறிய வருஷாந்தரப்பொருட்சாலைகள் இரண்டுவிதமான நன்மையைச்செய்திருக்கின்றன. அதாவது உயர்தரக்கைத்தொழி

லாளிகளுக்குள் போட்டியை யுண்டுபண்ணுவதோடுகூட அவர்கள் பற்பல நாடுகளிலுள்ள சரக்குகளை அறிய இடமேற்படுவதொன்று: ஒவ்வொருமாகாணத்திலும் ஒவ்வொரு பட்டணத்திலும் உபயோகத்துக்குவேண்டியிருக்கும் சரக்குகளைத் தெரிந்துகொள்ளவும் அவைகளைப்பற்றிய திட்டமான நயம்விலை முதலியவற்றை அறிந்துகொள்ளவும் பெரும் வியாபாரிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் அது பயன்படுவது மற்றொன்று. தொழிற்பொருட் காட்சிச் சாலைகள் சொற்பகாலத்துக்குள்ளேயே அதிகநன்மை விளைவித்திருக்கின்றன. அதுபற்றித் திருப்தியடைந்து நாம் நம்மை வமாற்றிக்கொள்ள வேண்டாம். ஏனெனில், மேனாட்டுச்சாமான்களின் அபாரமிகுதியும் நயமும் நானாவித மாதிரிகளுமாகிய இவற்றை நான் பார்த்ததில், அவற்றோடு ஒப்பிட நம் சாமான்களின்நிலைமை அதிகமேவலமாயிருக்கின்றது.

இதுபோன்ற பொருட்காட்சிகள், நமது இயற்கைப்பொருள்கள் பலவற்றையும் நாமே முற்றும் உபயோகப்படுத்தாது பின்வாங்கியிருக்கிறோம் என்று நமக்கு இடித்துரைக்க உபயோகப்படுகின்றன என்னலாம். இதுவிஷயத்தில், நாம் மேனாட்டாரது பரிபூர்ணமான நிலையையடையுமட்டும் திருப்தியடையக்கூடாது. கவர்ன்மெண்டார் அநுதாபப்பட்டுச்செய்யும் கூட்டுதவியுடன் நம்முடைய நுட்பமான புத்தியையுங் கொண்டுசெலுத்தினால், இரண்டொரு தலைமுறையிலேயே நாம் மேனாட்டாரது உயர்நிலையை யடையலாம்.

## தொழிற்சங்கத்தின் சென்றவருஷத்துவேலை.

கனவான்களே! சென்றவருஷமுதல் நீங்கள் ஒரு புதுவழியைக் கைப்பற்றினீர்கள். வருஷாந்தக் காட்சி (Annual Exhibitions) யோடு மாத்திரம் திருப்தியடையாமல் அதனுடன் ஒரு தொழிற் சங்கமும் கூட்டினீர்கள். அதன் முதற்கூட்டம் எனது அரசிறை மந்திரியாகிய (Revenue Minister) ஸ்ரீ: ஆர். ஸி. தத்தர் அக்கிராசனத்தின்கீழே நடைபெற்றது. அச்சங்கத்தார் செய்யும் வேலை, வருஷத்தில் ஒருமுறை கூடுதல் மாத்திரமானால் போதாது என்று எண்ணி வருஷம்முழுதும் நடைபெறவேண்டுமென்று நியமித்தீர்கள். அவ்வண்ணமே, 'மாகாணக்கைத்தொழிற் சங்கக்கமிட்டிகள்' (Provincial Industrial Committees) கல்கத்தா, பம்பாய்,

சென்னபட்டணம், அலகாபாத், லாகூர், நாகப்பூர் முதலிய தலைநகரங்களில் ஸ்தாபிக்கப்பெற்றன. மேலும் சாசுவத காரியதரிசி (Permanent Secretary)) ஒருவரும் அவருக்கு உபகாரியதரிசி (Under-secretary) ஒருவரும் நாகப்பூரை மத்தியஸ்தானமாகக்கொண்டு, பலவிடங்களினின்று கைத்தொழில்விஷயமான சமாசாரங்கள் சேகரிக்கவும், அவற்றை வேண்டிய இடங்களுக்கு எழுதி அறிவித்துக்கொண்டிருக்கவும், மாகாணக்கமிட்டியார் செய்யும் வேலைக்கு வேண்டிய உதவி புரியவும், மேற்கூறிய வேலையை வருஷமுழுதும் கொண்டுசெலுத்தவும் ஆகியநோக்கங்களுடன் நியமிக்கப்பட்டார்கள். இந்த மத்தியஸ்தானத்திலிருந்து செய்யும் வேலையை நிர்வகிப்பவர் (Central establishment) தங்கள் கடமையை மறந்து தூக்கம் கொள்ளவில்லையென்பதைக்கண்டு மகிழ்கின்றேன். இவ்வருஷமுடிவுக்குள்ளேயே, முக்கிய காரியதரிசியும் அவர் உதவிக்காரியதரிசியும் வசூலான கையொப்பப்பணத்துக்குள்ளேயே (Subscriptions) மொத்தச்செலவை அடக்கி மிச்சமும் வைத்திருக்கிறார்கள். அவ்வக்காலங்களில் படிக்கப்பெற்ற சிறந்த போதனைபுகட்டும் வியாசங்கள் எல்லாவற்றையும் ஒருங்குதொகுத்து தொழிற்சங்கத்தாரது யறிக்கைப்பத்திரத்துடன் (Report of the conference) சேர்த்து, கையடக்கமான புத்தகமொன்று (Handy volume) பிரசுரித்திருக்கிறார்கள். மேலும் இந்தியாவின் பற்பல இடங்களிலுள்ள வெவ்வேறு கைத்தொழில்களைக் குறிப்பிட்டுச் (சரிவர முற்றுப்பெற்றதாகாதபோதிலும் கூடியமட்டும் ஆரம்பத்தில் கூடுமான முயற்சியெடுத்துத் தொகுக்கப்பெற்ற) விவர அட்டவணை (Directory) யொன்றும் காட்டியிருக்கிறார்கள். இவ்வருஷம் இந்தியா முழுதும் கைத்தொழில் விஷயமாய்ச் செய்யப்பட்ட வேலையைக்குறித்து மிகவும் அழகான அறிக்கை யொன்றும் தயாரித்திருக்கிறார்கள்.

## மேற்கண்ட சங்கத்தின் பலவீனமான சிலகுறிப்புகள்.

கனவான்களே! ஒரு வருஷகாலத்துக்குள்ளேயே போதுமான சித்தியடைந்திருக்கிறீர்கள். என்றாலும், இதைக்கொண்டு திருப்தியடையக்கூடாது. இனி வருங்காலத்தே, அதிகமான அபிவிருத்தி எதிர்பார்க்கப்படுகிறது. கைத்தொழிற்சங்க ஏற்பாட்டில், பலவீன

மான குறிப்புகள் என்னவென்றால் மத்தியஸ்தான வேலை நிர்வகிப்பவர் மாகாணக்கமிட்டிகளோடு போதுமானபடி தொடர்பில்லாதிருத்தலும் பற்பல மாகாணக்கைத்தொழில்களையும் அபிவிருத்திபண்ண முயலுவதில் அக்கமிட்டிகளுக்குத்தக்க உதவிசெய்ய முடியாமலிருப்பதுமேயாம். மாகாணக்கமிட்டிகள் மாத்திரம் இருந்தால் போதா. ஜில்லாக்கமிட்டிகளும் நகரசங்கங்களும் நியமிக்கப்பட்டு எல்லோருக்கும் எல்லாவியாபாரமும் தெரிவிக்கக்கூடியவையாயிருக்கவேண்டும். நம் தேசம் அதிவிஸ்தாரமாயிருப்பதால், ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு தூரமானபிரயாணம் செய்யவேண்டியிருக்கிறது. நாகப்பூரி (Nagpur) லிருந்து பற்பலமாகாணங்களுக்குப்பிரயாணம் செய்யவேண்டுமாயின் முழுதும்ஒருபகல் ஓர்இரவுபிடிக்கும். ஆகையால் நாகப்பூரில் ஸ்தாபிக்கப்பெற்ற தலைமை வேலை நிர்வகிப்பவர் அதற்குப்புறம்பேயிருக்கும் மாகாணக்கமிட்டியாருக்கு அதிக உதவி செய்யக்கூடுமாயினும், மாகாணக்கமிட்டிகள் தாமே தத்தம்வேலைகளை ஊக்கத்துடன் உழைத்துச்செய்துகொள்ளக்கூடும். இவ்விதமாய் ஒற்றுமை நோக்கத்துடன் செய்யப்படும் கூட்டுவேலையால் வருஷாவருஷம் கைத்தொழிற் சங்கத்தின்காரியம் தொடர்ந்தஅபிவிருத்தியடையக் காணலாம். நம் தேசத்துக் கைத்தொழில்களை யபிவிருத்திபண்ணுவதற்கென்று எல்லாவிடங்களிலும் எடுத்துக்கொள்ளப்படும் முயற்சிகளை ஒன்றுகூட்டி இயக்குவதற்கு மத்தியஸ்தலசங்கம் ஒன்று இன்றியமையாதது. ஆகையால் தக்கதருணத்திலேதான், மத்தியஸ்தலக் கமிட்டியும், மற்ற மாகாணக்கமிட்டிகளும் கூடியமொத்தத் 'தொழிற்சங்கம்' ஸ்தாபிக்கப்பெற்றது.

## பொதுஜனக்கல்வி கைத்தொழிலபிவிருத்திக்கு முக்கிய ஏதுவாகும்.

கனவான்களே! என் அறிவு அநுபோகங்களிலிருந்து அநுஷ்டானத்துக்குக் கொண்டுவரக்கூடிய சில அபிப்பிராயங்களை வெளியிட விரும்புகிறேன். நம் கைத்தொழில்களை யபிவிருத்திபண்ணுதற்கு அதிமுக்கியமானவழி யென்னவென்றால், 'பொதுஜனக்கல்வி' யைப் பரவச்செய்வதே. நம் தேசத்து வித்தியா விஷயமான முறைகளில், முக்கியமானவையும் நல்ல பலனைக்கொடுக்கக்கூடியவையுமான

மாறுதல்கள் செய்யப்படலாம். ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி ஜனங்களின் வீட்டுவாயில்களில் கல்வியைக் கொண்டுபோய்க்கொடுத்து உதவினாலொழிய, (அதாவது பிரதமக்கல்வியை (Primary education) பணச்செலவின்றியும் கட்டாயப்படுத்தியும் விருத்திசெய்தாலொழிய) நாம் எடுத்துக்கொண்ட கைத்தொழிலபிவிருத்தி விஷயம் சரிவர சித்தியாகாது. இந்தியகவர்ன்மெண்டார் மேற்கூறிய கல்வியைப்பணச்செலவின்றிக்கொடுக்க ஆலோசனைகொண்டிருக்கிறார்கள் என்பதையறிந்து சந்தோஷிக்கிறேன்.

### சம்பளம் வாங்காததும் கட்டாயமுமான கல்விமுறை.

இத்தேசத்தில் மேற்கூறிய கல்வியை ஏற்படுத்துவது புதுமையானதொன்றேயாம். ஆனால் அதுபற்றி நாம் கல்வி அபிவிருத்தி விஷயமாய் ஜனங்களுக்குச்செய்யவேண்டிய கடமையினின்றும் நழுவக்கூடாது. மேனாட்டில் 'சர்வசமரச சமநிலையை வற்புறுத்தும் சங்கத்தார்' (Socialistic communities) செய்துவரும் மாதிரி—(அதாவது யாவருக்கும் பணச்செலவின்றிக் காலைபோஜனம், ஸ்நானசௌகரியம், கால்சராய் முதலியவைகொடுத்து உதவுவது)—செய்யும்படி நான் புத்திசொல்ல மாட்டேன். பரோடாராஜ்யமுழுதும் 'கட்டாயக்கல்வி' (Compulsory education) யேற்படுத்தி அதனால் என்னுடைய ஜனங்கள் பிரயோசனத்தையடையும்படிசெய்ய முயன்று வருகிறேன்.

சிலவருஷங்களாக என்னிராஜ்ஜியத்தின் ஒருபாகத்தே அது நடைபெற்றதில் பலன்கிடைத்தது. அதனாலுண்டான நன்மைப் பெருக்கினால் ஊக்கம்கொண்டு ராஜ்ஜியமுழுதுமே 'பிரதமக்கல்வி' (Primary Education) யைக் கட்டாயப்படுத்திக்கற்பிக்கத் தீர்மானித்திருக்கிறேன்.

### உயர்தரத்தொழிற்கல்வியும் அதன் விசேஷமும்.

தற்காலத்தில் தொழிற்கல்வி அத்தியாவசியமானது. நான் சமீபத்தில் ஐரோப்பா, அமெரிக்காவில் செய்த சுற்றுப்பிரயாணத்தில் என்மனதில் ஆழப்பதிந்தது என்னவென்றால், நாட்டு ஜனங்களின்

கைத்தொழில் அபிவிர்த்தி யாவதற்கு 'உயர்தரத்தொழிற்கல்வி' சாதகமாயிருக்கிறதென்பதே. மேனாட்டில் ஒருதலைமுறைக்காலத்துக்குள் கல்வி விஷயத்தில் முழுதும் அபிவிருத்தி உண்டாயிருக்கிறது என்பது உண்மையே. மேனாட்டார் தற்காலத்தில் யுத்த ஆயுதங்களை விர்த்திபண்ணுவதிலாவது, சைந்நியங்களை அதிகரிப்பதிலாவது, கடற்சேனைகளைப் பெருக்குவதிலாவது அவ்வளவாக எண்ணங்கொள்ளாது, தற்காலத்தில் உயர்தரஜாதியாருக்குள் கைத்தொழிற்றலைமைவகிப்பதில் நிகழும் போட்டியிலே அதற்குச் சாதகமான தொழிற்கல்வியையே அபேக்ஷித்து விருத்திசெய்ய ஆத்திரமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

## கைத்தொழில் ஊக்கமுள்ள தலைமை ஜாதியார்கள்.

ஐரோப்பிய ஜாதியாருக்குள் ஜெர்மனியே கைத்தொழிலில் மேலான உயர்வை யடைந்திருக்கின்றது. அத்தேசத்து "உயர்தரத் தொழிற்கல்வி" கற்பிக்கும் சாலைகளிலே பர்லினிலுள்ள (Berlin) 'இங்க்ஸ் தொழிற்கல்விச்சாலையே அதிப்பிரசித்தமானது. அங்கே உயர்தரபோதகாசிரியர் 1500-க்கு மேற்பட்டமாணவர்களுக்குத்தொழிற்கல்வி போதிக்கின்றனர். தொழிலில் செய்துகாட்டுகிற ரசாயன சாஸ்திரக்கல்வி (Applied Chemistry) மூலமாய்ப்பற்பல எண்ணெய்வகைகள், வர்ணவகைகள், சாயமேற்றுந் தொழில் (Dyeing) சாயம்போக்குதொழில் (Bleaching) துணியிலும் பட்டிலும் அச்சிடுந்தொழில், தோல்பதனிடும்தொழில் (Tanning) முதலியகைத்தொழில்கள் மற்றெங்கும்விட விஸ்தாரமாக அங்கே போதிக்கப்படுகின்றன.

## பிரான்சில் கைத்தொழில்கள்.

பிரான்சும் தொழில்கற்பிக்கும்சாலை மூலமாகத் தன்கைத்தொழில்களைப் பலப்படுத்த முயலுகிறது. அதன் தலைநகரமாகிய பாரிஸிலுள்ள (Paris) "மூஸ் டி ஆர்ட்ஸ் எட் மெடியே" (Mucee des arts et Metiere) என்ற பொருட்காட்சிச் சாலையில் பற்பல யந்திரங்களும் மாதிரியந்திரங்களும் அடங்கிய ஏராளமான சேகரவஸ்துக்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமான உயர்தரத்தொழிற் கல்விசம்

பந்தப்பட்ட விஷயங்களைப் போதிப்பதற்கு சாஸ்திர வகுப்புகளிருக்கின்றன. பிரான்சு கவர்ன்மெண்டாரே, ஸெவர்ஸிலுள்ள பீங்கான் சாலையை (Royal porcelain factory) வைத்து நடத்துகிறார்கள். மேலும், காபலின்ஸிலுள்ள சித்திரத்தொங்கலாடைகள் செய்யும் தொழிற்சாலை (Tapestry manufactory) யையும் தாங்களே நடத்துகிறார்கள். ஒவ்வொரு வருஷமும், அடிக்கடி, பாரிஸிலுள்ள 'கிராண்ட் அன்ட் பெத்தேபாலேஸ்' (Grand and Petit Palais)என்னும் ஒரு விஸ்தாரமான மண்டபத்தில் பொருட்காட்சிகள் வைக்கப்படுகின்றன.

## ஆஸ்திரியாத் தொழிற்சாலைகள்.

ஆஸ்திரியாவும் கைத்தொழில் விஷயத்தில் கீழானதல்ல. வியன்னாவில் தொழில் கற்பிக்கும் கலாசாலைகளிருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு கைத்தொழிலைக் கற்றுக்கொடுக்கின்றது. இத்தாலியாவிலும் (Italy) தொழிற்கலாசாலைகளிருக்கின்றன. நேபில்ஸில் (Naples) உள்ள காசநோவாக் கலாசாலை மாதிரியை முன்வைத்து ஏற்படுத்தப்பட்ட உயர்தர ஸர்வ தொழிற்கலாசாலை (Polytechnic institute)யின் உதவியினால் சிறந்தகைத்தொழிலாளிகளைப்பலவிடங்களிலிருந்து சேகரித்து அவர்களிடமிருந்து பற்பல தொழில்கள் கற்றுக்கொள்ளப்படுகின்றன. இவ்விதமாய், உயர்தரத்தொழிலில் சாமர்த்தியசாலிகள் ஒருங்கு சேர்தலால், தத்தம் வியாபார ரகசியங்களையும் குறைவுகளையும் பேசியறியலாகும்.

## லண்டனிலுள்ள உயர்தரத்தொழிற்சாலை.

லண்டனில், ஸிட்டி. அன்டு கில்ட்ஸ் டெக்னிகல்காலேஜும் பற்பல 'பாலிடெக்னிக்ஸும்' (Polytechnies) ஜனங்களுக்கு உயர்தரத்தொழிலிலும் மற்றக்கைத்தொழிலிலும் அநுபவத்தோடு கூடிய பழக்கத்தைப் புகட்டுகின்றன.

## இங்கிலாந்தில் புதிதாய் ஏற்படுத்தப்பட்ட சர்வகலாசாலைகள்.

ஆக்ஸ்போர்ட்டு கேம்பிரிஜ் லண்டன் முதலிய சர்வகலாசாலைகளில் உயர்தரபாஷாஞானக் கல்வி புகட்டப்படுவதுபோல் மாஞ்சஸ்டர் பர்மிங்ஹாம் லீட்ஸ் பட்டணங்களில் புதிதாய் ஏற்படுத்த

பட்ட கலாசாலைகள் 'உயர்தரத் தொழிற்கல்வி' புகட்டுகின்றன. மாஞ்சஸ்டரில் முனிசிபாலிடியாரால் உயர்தரத்தொழிற் கலாசாலை ஒன்றும் ஏற்பட்டிருக்கிறது. அஃது அப்பெரிய கைத்தொழிற் பட்டணத்தின் ஊக்கத்துக்கு ஞாபகக்குறியாகவிருக்கிறது. அங்கே யந்திரவிதி, (mechanical engineering) மின்சாரயந்திர விதி (electrical engineering) தொழிற்குரிய சடசாஸ்திரம் (Technical Physics) ரசாயன சாஸ்திரம் (கைத்தொழிற் குரியதும் பொதுப் பட்டதும்) (Industrial and general chemistry) சாயம்போக்குந் தொழில், சாயம்காய்ச்சுந்தொழில், நெசவுத்துணியில் அச்சடிக்கும் தொழில் (Printing and finishing of textles) காகிதம்செய்யும் தொழில், லோகசாஸ்திரம் (Metallurgy) முதலிய பலவகைப்பட்ட சாஸ்திரங்கள் போதிக்கப்படுகின்றன. பரோடாவிலிருந்து சில மாணவர்கள் அங்கேபோய் திராவக (acids) உப்புச்சத்துவகைகளுக் (alkalis) குரியதொழில், கிலத்திட்டமறிதொழில் (plumbing) சௌக்கியசாஸ்திரம் (sanitary engineering) கற்கிறார்கள்.

அமெரிக்காவில் 'தொழிற்கல்வி' அடைந்திருக்கும் உந்நதநிலை.

### ராஜாங்கஉதவிபெற்ற கலாசாலைகள்.

நான் சமீபத்தில் சுற்றுப்பிரயாணம்செய்த தேசங்கள் எல்லாவற்றிலும் அமெரிக்காவிலேதான் தொழிற்கல்வி உந்நதநிலையையடைந்திருக்கிறது. ஐக்கிய நாட்டில் (United States) ஒவ்வொரு பிரத்தியேகராஜ்ஜியத்திலும் ராஜாங்க உதவிபெற்ற தொழிற்கலாசாலைகளிருக்கின்றன. அங்கே மாணாக்கர்கள் பணச்செலவின்றிப் படிக்கிறார்கள். தொழிற்கல்வியில் ஒவ்வொருவரும் பழகியிருத்தல் தேசநன்மைக்கு ஆவசியகம் என்று ராஜாங்கத்தார் எண்ணிக் கலாசாலைகளுக்கு மானியநிலங்கள் விட்டும், வருஷாந்தர உதவிப்பணம் (annual grants) கொடுத்தும் வருவதனால் இனாமாகவே தொழிற் கல்வியை யாவரும் கற்றுக்கொள்ளலாம். ராஜாங்கவுதவிபெற்ற ஒவ்வொரு கலாசாலையிலும் விவசாயசாஸ்திரமும் கொஞ்சம் யுத்த தந்திரமும் கற்பிக்கப்படுகின்றன. இந்தக்கலாசாலைகளின் ஐவேஜிக்குத் தக்கபடி மற்றவிஷயங்களும் போதிக்கப்படுகிறது.

## ஐக்கியநாட்டில் கோடீசுவரர்கள் கைகொடுத்துதவும் கலாசாலைகள்.

மேற்கூறிய ராஜாங்க உதவிபெற்ற கலாசாலைகளைத்தவிர ஏறக்குறைய 43-தொழிற்கலாசாலைகள் பெருஞ்செல்வர்களது உதவிகொண்டே நடந்துவருகின்றன. அங்கே, சிற்பமும் யந்திரசாஸ்திரங்களின் ஒவ்வோர் அம்சமும் கற்பிக்கப்படுகின்றன—மின்சாரயந்திரசாஸ்திரமும் தொழிலுக்குரிய யந்திரசாஸ்திரமும் சிற்பப்படமெழுதலும் நெசவுத்தொழிலுக்குரிய மாதிரிவகை காட்டும்சாஸ்திரமும் மற்றுமுள்ள சாஸ்திரவகைகளும் கற்பிக்கப்படுகின்றன. மேற்கூறிய கலாசாலைகளில் போஸ்டனிலுள்ள பெரியதொழிற்சாலையும் சிகாகோவிலுள்ள ஆர்மர் தொழிற்கலாசாலையும் நியூயார்க்கிலுள்ள பராட் தொழிற் கலாசாலையும் தனிகர்கள் உதவிகொண்டே நடைபெறும் கலாசாலைகளில் அதிகப்பிரசித்திபெற்றவை. இம்மூன்று கலாசாலைகளில் மாத்திரம் மொத்தம் 6000 மாணவர்களுக்குமேலே கற்பிக்கப்படுகிறார்கள்.

## ஹார்வார்ட் (Harvard), ஏல் (Yale), கொலம்பியா (Columbia) வைப்போன்ற சர்வகலாசாலைகள்.

மேற்கூறிய சர்வகலாசாலைகளில் யந்திரசாஸ்திரம் ஒவ்வோர் அம்சத்திலும் கற்றுக்கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு தனிநியவித்யாப்யாசப்பள்ளிக்கூடத்திலும் தச்சுவேலை கொல்லவேலை யந்திரவேலைகளும் மற்றும் கைப்பழக்கத்துக்குரிய தொழில்களும் கற்பிக்கப்படுகின்றன.

## ஜப்பான் அடைந்த கைத்தொழில் வெற்றி.

நான் ஜப்பானை இதுவரை பார்க்கவில்லை. என்றாலும், அத்தேசம் ஒரு தலைமுறைக்காலத்துக்குள்ளேயே செய்துமுடித்த அபரிமிதமான வேலையை நாம் எல்லோரும் அறிவோம். அது யுத்தத்தில் சம்பாதித்துப்பெற்ற வெற்றிகளால் உலகத்தின் முதற்றரஜாதியில் ஒன்றாக முன்வந்துவிட்டது. அத்தேசம் நான்ஷான் மூக்டன் யுத்தகளங்களில் பெற்றவெற்றிகள் விகாஸமானாலும், தொழிற்கல்விமுறையை அபிவிருத்திபண்ணினதாலடைந்த தொழில் மேன்மை அதைக்காட்டிலும் விகாசமே. தொழிற் கல்விமுறை அங்கே முற்றுப்பெற்றிருக்கிறது.

## கைப்பழக்கம். (Manual training.)

[சாதாரணப் பள்ளிக்கூடங்களிலும் கைப்பழக்க சாதகக் கல்வியும் மற்றக்கைத்தொழிற்கல்வியும் ஏற்படுத்தலாம் என்ற அபிப்பிராயம்.]

நான் உங்களுக்கு என் இரண்டாவது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறேன். நீங்கள் தொழிற்சாலைகள் ஸ்தாபிப்பதோடு கூட சாதாரணப்பள்ளிக்கூடங்களிலும் கைப்பழக்க சாதகமுறை, ஏதாவது ஏற்படுத்த வேண்டும். இளம்பருவத்திலேயே கண்ணும் கையும் பழக்கப்பட்டு சாதகமானால் அதிக பிரயோசனத்தைக் கொடுக்கும்: பின்னால் கைத்தொழில் செய்துபிழைக்கவேண்டியிராத போதிலும், சாதகப்படுத்தல் யாவருக்கும் உபயோகமானது. எல்லா மாணாக்கரும் சித்திரம் வரைதல் மாதிரிவகைசெய்தல் (modelling) தச்சவேலை, கொல்லவேலை ஆகிய இவற்றில் பரிச்சயமடைதல் மிகவும் நன்மையே. வைத்தியரும் மனசிலைசாஸ்திரிகளும் (Psychologists) மேற்கூறிய சாதகத்தைச் சிலாகித்துக் கூறுகிறார்கள். ஏனென்றால், பிள்ளைகள் படித்துச் சலித்துப்போனபின் மேற்கூறியவற்றைச் சாதகம்பண்ணுவது அவர்களுக்கு உற்சாகத்தைக்கொடுக்கவும், மனதைத்திடப்படுத்தவும் உதவுகிறதல்லாமலும், மாணாக்கர்கள், படிப்பையும் தொழில்வித்தையையும் இலகுவாய்க் கற்றுக்கொள்ளுவார்கள். ஆகையால், தொழில் கற்றுக்கொடுக்கும்படி ஏற்பாடு செய்வதினால் மாணாக்கர்கள் இருவாறு முற்றுப்பெற்ற அறிவை அடைகிறார்கள். அதாவது:—வெறும் படிப்புமாத்திரமேயன்றி மற்றத்தொழில்வித்தையும் கற்றுக்கொள்ளுகிறார்கள். தனவான்களும் சாமானிய கைத்தொழில்களைக் கற்றவராவர். ஏழைகளும் இளம்பருவத்திலேயே கருவிகளைத்தக்க பயிற்சியுடன் உபயோகிக்கும் மாதிரியை அறிந்துகொள்ளுகிறார்கள். எவ்வித நிலைமையிலுள்ளவர்களும் கைத்தொழிலின் கண்ணியத்தை இப்போதைக் காட்டிலும் இனி நன்குணர்வார்கள். பள்ளிக்கூடங்களில் ஆரம்பத்திலே கைத்தொழிற் பழக்கஞ் செய்வித்தல், தேசத்தின் கைத்தொழிலபிவிர்த்தி ஊக்கத்துக்கு ஊன்றுகோலாகும்.

மேலும், ஒரு விஷயத்தை நீங்கள் ஞாபகத்தில் எப்போதும்வைத்துக்கொள்ளவேண்டும். கைத்தொழில் வித்தையை எவ்வளவு நன்றாய்க் கற்றாலும், நாம் உயர்தரப்பொதுக் கல்வி (Liberal and general education) யின்றி யிருக்கக்கூடாது. ஏனென்றால், மேற்கூறிய உயர்தரக்கல்வியாலேயே எல்லாவித சாஸ்திரப்படிப்பும் ஆகவேண்டியிருக்கிறது. தொழிற்கல்வியைப் பொதுக்கல்வியோடு சேர்த்துக்கற்கவேண்டும். ஆனால் பொதுக்கல்வியை முழுதும் விலக்கித் தொழிற்கல்வியைமாத்திரம் கற்பதனால் பிரயோஜனமில்லை.

## வெளிநாட்டுக்கல்வி.

[கைத்தொழிற்கல்வியை முழுதும் கற்றுவர வாலிபர்களை ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பானுக்கு அனுப்பவேண்டும்.]

நமது சாதாரணப் பள்ளிக்கூடங்களிலும் கைப்பழக்க முறையை ஏற்படுத்துவதனாலும் தொழிற்சாலைகள் ஸ்தாபிப்பதனாலும் உண்டாகும் நன்மையைவற்புறுத்த இதுகாறும் முயன்றேன். போதுமான அளவு, மேற்கூறிய முறை விஸ்தாரமாய் ஏற்பட்டு நடந்துவரப்பலவருஷங்கள் செல்லும். அப்போர்ப்பட்ட ஏற்பாடுமுற்றுப்பெற்றுக் கைத்தொழிற்கல்வியிலும் யந்திரச்சூழ்ச்சியிலும் பயிற்சிபெற்றால்தான் நாம்முதற்றரஜாதியாருக்குள் ஒருவராகலாம். உயர்தரக்கைத்தொழிற் கல்வி நம் தேசத்தில் இல்லாததனால், வாலிபர்களை ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பானுக்குப் பலவருடங்களோ அல்லது பல தலைமுறைகளோ அனுப்பியேனும் மேற்கூறிய கல்விகளைக் கற்றுவரச் செய்யவேண்டும். ஆகையால் கட்டாயம் அப்படிச் செய்யுங்கள். தொன்றுதொட்டு வந்த ஆசாரக்கட்டுகளுக்குப் பயந்து பற்பல தேசங்களில் சுற்றுப்பிரயாணம் செய்யத்தவறுகிறீர்கள். நீங்கள் பற்பல இடங்களுக்குப் போனாற்றான் புத்தியானது, பலவித அறிவு ஆராய்ச்சிகளால் நிரம்பி விகாசமாகும். உலகத்தில் முதன்மை பெற்ற ஜாதியாருங்கூட அடிக்கடி அந்நிய ஜாதியாரோடு கலப்பதனாலேயே மேலான நாகரீகம் அடைகிறார்கள். இந்தியாவும் தற்காலத்தில் அப்படிச்செய்யவேண்டியது அத்தியாவசியகம். அந்நியநாட்டுச்சுற்றுப்பிரயாணத்தாலும் அந்நியஜாதியாரோடு பலவிஷயங்களில் உறவாடுதலாலும் உண்டாகும் நல்ல பலனை 50-வருடங்களுக்குள் இந்தியாவில்

ஒவ்வொரு "டிபார்ட் மெண்டிலும்" அறிந்துகொள்ளலாம். நான் சமீபத்தில் திரும்பி வந்ததின்மேல் நம்தேசத்தார் அந்நியக் கல்விமுறைகளைப் பற்றிக்கொண்ட கோட்பாடு மாறியிருக்கிறதென்பதை அறிந்து கொண்டேன். மேனாட்டு ஜாதியார்களைப்பற்றி நான் கொண்டுள்ள அபிப்பிராயங்களையறிய அவர்கள் ஆவலுடையவர்களாயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட விஷயங்களை அறியவேண்டுமென்ற ஆவல் மிகவும் நல்லதே. நான் அமெரிக்காவிலிருந்த போது, 2000 3000 மாணாக்கர்கள், ஐரோப்பிய வித்தியா முறைகளை நன்கு ஆராய்ந்து கற்றும் அவற்றில் ஆழ்ந்துசெல்லும் ஞானத்தையடைந்தும் வருகிறார்களென்று கேள்விப்பட்டேன். அமெரிக்கா கவர்ன்மெண்டாரே பற்பல தேசங்களின் விளைபொருள்களைப் பற்றி சரிவரப் படிக்க வாலிபர்களை அனுப்புகிறார்கள்.* இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்சு தேசங்கள் வியாபாரத்தில் முதன்மை பெற்றிருந்தாலும், மற்ற இடங்களுக்குப்போய்ப் பலவிஷயங்களை ஆராய்ந்து கற்பதற்காக வாலிபர்களை யனுப்பி வருகின்றன. நமது தேசத்துக்குச் சமீபமான ஜப்பானும் நூற்றுக்கணக்கான வாலிபர்களை பிரான்சு, ஜெர்மனி, அமெரிக்காநாடுகளுக்குக் கல்வியை முற்றுங்கற்றுவர அனுப்பி வருகின்றது. மேற்கூறியவற்றிலிருந்து நீங்கள் மேற்றேசத்தார்க்கு அறிவு விர்த்தியிலுள்ள பேரவாவை ஒருவாறு அறிந்துகொள்ளலாம். எப்படியாவது தனிக்கல்வியை (Special education) அடையவேண்டுமென்ற எண்ணத்தால் ஜப்பானிய மாணாக்கரில் அநேகர் கீழ்த்தரக் கைத்தொழிலைச் செய்தேனும் ஜீவனோபாயம் தேடிக்கொண்டு, தாங்கள் எடுத்த வித்தையை முடியக் கற்று வருகிறார்கள்.

## ஜப்பானில் கல்விமான்களாகிய ராஜ்யதுரந்தரர்கள்.

ஐரோப்பிய உயர்தரக்கலாசாலைகளுக்கு (Seminaries) வாலிபர்களை யனுப்பித்தான் ஜப்பான் முன்னுக்குவந்தது. காட்டிஞ்சென் (Gottingen) லீப்சிக் (Leipzic) கலாசாலைகளில் இலௌகிகமுறைகளையும் ராஜதந்திர முறைகளையும் பற்றிய சாஸ்திரீயவிதிகளைச் சரிவரக் கற்ற வித்துவான்களான ராஜதந்திரிகளாற்றான் அது அவ்விதப் பிரசித்தியையும் பெருமையையும் அடைந்திருக்கிறது. அத்தேசத்து வாலிபர்கள் டில்பரி (Tilbury), போர்ட்ஸ்மௌத்தி (Ports-

mouth) லுள்ள கப்பல் செப்பமிடுந்துறைகளில் (Docks) கடல்யுத்தத்துக்குரிய கல்வியைக்கற்ற பலத்தாலல்லவோ, அது கீழ்க்கடல்களுக்கு (Eastern seas) அதிபதியாயிருக்கிறது. சேம்ப்-டி-மார்ஸ் (Champ-de-mars) என்னும் வெளியிடங்களில் கற்பிக்கப்படும் யுத்தச்சூட்சிகளிலும் தந்திரோபாயங்களிலும் நன்றாய்த்தேர்ந்த யுத்த வீரர்களைக்கொண்டுதான், அது யுத்தங்களை நிர்வகித்து வெற்றிபெற்றது. லண்டன், பர்லின், நியூயார்க் இந்நகரங்களிலுள்ள நாணயசாலை நிபுணர்களிடம் வியாபார மர்மங்களை அறிந்துகொண்டதனால்தான் கீழ்த்தேச வியாபாரத்தில் அது முதன்மையை அதிசீக்கிரம் வகிக்கும் நிலையில் உள்ளது. தன் சுதேசக்ஷேமத்துக்காக பாடுபட்டு உழைக்கும் வாலிபசிரோமணிகளை ஜப்பானில் காண்கிறோமல்லவா? இந்திய வாலிபர்களுக்கு மேற்கூறிய ஜப்பானியர் திருஷ்டாந்தமே போதியது. நாமும் நம் தேசத்துக்காக சுயநன்மையையே எப்பொழுதும் கருதாதுமறந்தும் பொதுநன்மைக்காக உழைத்தும் வருவோமாக. நாமும் அவர்களைப்போல் ஜாதிஐக்கியத்தைப் பலப்படுத்தவும் எல்லாத்தொழில்களிலும் சிறந்தபுதுமாதிரியைக்கற்றுக்கொள்வதில் ஆவலையும் ஊக்கத்தையும் மேன்மேல் அடையவும், பொறுமையாய் உழைக்கவும் கற்றுக்கொள்ளவேண்டும். நாம் அப்படிச்செய்தால் நம் தேசாபிவிர்த்தியைக் காப்பாற்றிவிடக்கூடும்.

### கனம் ஜெ. ஸி. கோஸ் (J. C. GHOSE) அவர்கள் ஏற்படுத்திய ஒழுங்கு.

இம்மாகாணத்தில் யோகீந்திர சந்திரகோஸ் (Jogendra-Chandra Ghose) என்னும் தேசாபிமானி அதிகஊக்கத்தோடும் தேசாபிமானத்தோடும் தேசநன்மைக்கு வருந்தி உழைக்கிறார் என்றும் ஐரோப்பா, அமெரிக்காவுக்குப்போய் உயர்தரக்கல்வி கற்றுவர வாலிபர்களை அனுப்புவதற்கான பெருத்த ஏற்பாடுகள் செய்துவருகிறார் என்றும் அறிய நான் சந்தோஷிக்கிறேன். அவ்வேற்பாட்டினால் சிலவாலிபர்கள் முன்னமே அவ்விடங்களுக்குப் போயிருக்கிறார்கள். நான் ஐரோப்பா, அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணம் செய்தபொழுது அநேக பங்காளவாலிபர்கள் அத்தேசங்களில் கற்றுக்கொண்டிருப்பதைப்பார்த்து அதிகசந்தோஷப்பட்டேன். அவர்களது சுதே

சாபிமானத்தைச் சொல்லிமுடியாது. அப்பேர்ப்பட்ட வாலிபர்களி
ருப்பதைக் குறித்து நம்தேசம் கர்வமடையலாம். இவ்வண்ணமே
பரோடா ராஜ்ஜியத்திலிருந்தும், அநேகவருஷங்களாக, ராஜாங்க உப
காரம் பெற்று ஐரோப்பாவில் கற்றுத்திரும்பின வாலிபர்கள், ராஜ்ஜி
யத்தில் நன்றாய் உழைத்தும், இந்தியாவின் மற்றபாகங்களில் தக்க
வேலைகளில் அமர்ந்தும் இருக்கிறார்கள். சமீபத்திலும் அநேக இள
மாணவர்கள் ராஜ்ஜியவுதவிபெற்று இங்கிலாந்து, ஜெர்மனி,
அமெரிக்கா, ஜப்பான் நாடுகளுக்குக் கற்றுவரப்போயிருக்கிறார்கள்.
நவீனக் கைத்தொழிலின் மாதிரிகளையே கற்பதற்காகச் சில மாணவர்
களைக் குறிப்பிட்டகாலங்களில் ஒழுங்காய் அனுப்பிவரயோசித்துக்
கொண்டுவருகிறார்கள்.

## இந்தியா அடையக்கூடிய பலன்கள்.

கனவான்களே! இந்தியா தற்காலத்தில் பழையனகழித்தலும்
புதியன புகுத்தலுமான நிலைமையிலிருக்கிறது. அது விசேஷமான
பெரும் பலன்களையடையக்கூடும். பம்பாயிலுள்ளவர்கள் மேற்குத்
தொடர்ச்சிமலையிலுண்டாகும் மின்சார உதவியைக்கொண்டு தங்கள்
யந்திரங்களை இயக்கி வேலைசெய்யப் பிரயத்தனம்பண்ணி வருகிறார்
கள். சென்னையிலுள்ளவர்கள் மரப்பருத்தி (Tree cotton) யை
அபிவிருத்தி பண்ணும் உபாயத்தை நாடுகிறார்கள். காலஞ்சென்ற
கனம்—தாதாவால் நன்கொடையளிக்கப்பெற்ற 'ஆராய்ச்சிக்கலா
சாலை' (Research institute) யினால் இந்தியாவுக்கு மிகஉபயோக
மான பலன்கள் கைகூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜனங்கள்
இதுவரை கொண்ட ஊக்கமின்மையாகிய உறக்கத்தினின்றும் விழித்
துக்கொண்டார்கள் என்பதை நாம் தேசமுழுதும் நன்றாய்க்காண்கி
றோம். நாம் பொறுமையோடும் விடாமுயற்சியோடும் அநேகவருஷ
காலத்துக்குச்சோர்வின்றி உழைத்துவந்தால் தான், கைத்தொழிலில்
மேனாட்டாரது நிலைமை நாம் அடையலாம் என்பதை மனதில் பதிய
வைத்துக்கொள்ளவேண்டும். நாம் எடுத்தகாரியத்தைக்கொண்டு செ
லுத்தும் ஊக்கமும், மனோதிடமும் பெற்று, நாணயவிஷயத்தில் ஒரு
வரையொருவர் மோசஞ்செய்யச் சிறிதும் நினையாமல் நம்பிக்கைவை
த்துவரவேண்டும். நாம் ஒவ்வொரு விஷயத்திலும் முக்கியத்தை அமு

க்கியத்தினின்றும் பிரித்தறியத்தெரிந்துகொள்ளவேண்டும். அதாவது விஷயங்களின் தத்துவத்தை உற்று நோக்கவேண்டும். அற்ப விஷயங்களில் நமது புத்தியை அலையும்படி விடக்கூடாது.

## இந்தியாவுக்குத்தக்க படிப்பினைகள்.

நீங்கள் அவகாசம் கொடுத்தால், தற்காலத்தில் பற்பல ஜாதியாரின் அனுபோகங்களிலிருந்து இந்தியா, தான் அறிந்துகொள்ளவேண்டிய படிப்பினைகளைச்சொல்ல விரும்புகிறேன். ஒருகாலத்தில் ஓங்கி உயர்ந்த நாகரீகஸ்தலமாகிய பூர்வீக இஜிப்தை (Ancient Egypt) உற்றுநோக்கி நாம் படித்துக்கொள்ளும் படிப்பினையென்னவென்றால், ஒரு தேசம் அழிவற்ற உன்னதநாகரீகத்தையே எக்காலத்திலும் யடைந்துவரவேண்டுமாயின், அத்தேசத்தில் விவசாய லோகப்பொருள்கள் ஏராளமாயிருப்பதினால்மாத்திரம் அப்படி சாத்தியமாகாது என்பதே. ஆனாலும், மேற்கூறிய விளைபொருள்களின் மிகுதியே நிலைபெற்ற நாகரிக (Permanent civilisation) த்துக்கு மூலாதாரமாகும். பூர்வகாலத்தில் எகிப்து நாடு விளைபொருள்களை ஏராளமாகப்பெற்றிருந்தது என்றாலும், ஒரு ராஜ்ஜியத்திலுள்ள ஒவ்வொரு குடியும், எவ்வளவு தாழ்ந்த நிலைமையிலிருந்தாலும், அவ்விராஜ்ஜியத்திற்குத் தாமோர் அங்கம் என்னும் உண்மையை மறந்து பொது ஜனக்ஷேமத்துக்குரிய முக்கிய விஷயங்களைக்கவனிக்காது, அலக்ஷியஞ்செய்து வந்ததனால், பிராபல்லியத்தையும் நாகரிகத்தையும் அது இழக்கநேரிட்டதோடு அது தன்னிலையினின்றும் சுவாதீன அரசாட்சியினின்றும் விழுந்து அடிமையாகி தானடைந்த சாஸ்திரத்தேர்ச்சியையும் இழக்கலுற்றது. கீழ்நிலைமையிலுள்ளவர்களைப்பழித்து, அவர்கள் தத்தம் உழைப்பினால் மேன்மையடையவொட்டாதபடி தவிர்க்கும் எந்த ராஜ்ஜியமும் நிலைநிற்கமாட்டாது. உண்மையாகவே அப்பேர்ப்பட்ட ராஜ்ஜியம் மண்மேட்டில் கட்டின வீடாகும். ஒரு ராஜ்ஜியத்தின் பலமும் ஐசுவரியமும் அதன் குடிகளின் தகைமையால் அமைவதாகும்.

## கிரேக்கதேசமும், அதன் வியாபார மேன்மையும்.

கிரேக்க தேசமானது, தத்துவ ஆராய்ச்சிக் குறைவினாலாவது, சாஸ்திர ஞானக்குறைவினாலாவது, ராஜ்ஜிய தந்திர அறிவின்மையி

ளலாவது சீர்கெடவில்லை. மேற்கூறிய விஷயங்களில் அதன் மேன்மை ஜகத்பிரசித்தம். மேனாடு முழுதும் நாகரீகத்தைப்பரவச் செய்ததும் அதுவே. மேனாட்டில் பெரிக்கிளிஸ் (Pericles), பிளேட்டோ (Plato), அரிஸ்டாட்டில் (Aristotle) என்ற கிரேக்க மஹான்களின் பேர்கள் யாவரும்போற்றிப் புகழும் பெயர்களாகும். ஆதன்ஸ் ராஜ்ஜியமானது (Athens), தன் செல்வம் எப்பொழுதும் செழித்து ஓங்குவதற்குரிய நூலாதாரமான நுணுக்கமுறைகளை (Economic basis of her prosperity) அறிந்துகொள்ளாத குறைவினால் தான், அது, உலக சரித்திரத்தில் சிலகால மாத்திரம் பிரகாசித்ததேயன்றி, எக்காலத்திலும் நிலைபெற்றிருக்காமல் மறைந்து போய்விட்டது. தன் வியாபாரமும் கைத்தொழிலும் விர்த்தியாவதற்கேற்றதும் கடலோரமானதுமான தக்கஸ்தலங்களை நன்றாய் உபயோகித்தும், தன் வியாபாரமுழுவதையும் அடிமைகளிடத்திலல்லாது சுவாதீன புருஷரிடம் (Free-men) ஒப்புவித்தும், தன் ராஜ்ஜிய நிபுணர்களைக்கொண்டு அவர்கள் ஏற்படுத்தும் தக்க வருமானமுறைகளையே அநுசரித்தும் வந்திருக்குமானால், அதைப்பற்றிய சரித்திரமானது அழியாத பெருமையையும் பிரசித்தியையும் அடைந்திருக்கும். ஆனால், அது அப்படிச் செய்யவில்லை. அது தன் லோகவிளைபொருள்களை (Mineral resources) வீணில் கழித்தும், கோவில்கள் வித்தியாமண்டபங்கள் கட்டுவதில், ஏராளமான பணத்தைச் செலவுசெய்தும் வந்தது. மேனாட்டு நாகரீக முதிர்ச்சிக்கெல்லாம் ஊற்றாயிருந்து உதவிய கிரேக்க நாகரீகத்தைக் குறைவாகச்சொல்ல நான் எண்ணவில்லை. ஆனால், ஒன்று மாத்திரம் பொதுவாய்ச் சொல்லலாம். அதாவது:—செல்வம் எப்பொழுதும் ஓங்குவதற்கான நூலாதார முறைகளை (Economics) நன்றாய் அறிந்து கொண்டால் ஒழிய, எந்த நாகரீக ஜாதியாரும், எப்பேர்ப்பட்ட உன்னத நாகரீகத்தை ஒருகாலத்தில் யடைந்திருந்தாலும், அவர்கள் அப்படியே எப்பொழுதும் அவ்விதப் பதவியிலிருந்து வரமுடியாது என்பதே. இவ்வுண்மையை பூர்வ கிரேக்க நாட்டு அநுபோகத்திலிருந்து தற்காலம் இந்தியா அறிந்துகொள்ள வேண்டும். நீங்கள் ஏராளமான பணத்தைச் செலவிடும்போது கவனிக்கவேண்டியது என்னவென்றால், அப்பணம் சாசுவத பலனைக் கொடுக்கிறதா என்பதே. இந்தியாவின் செல்வப்பெருக்கின மேம்பாட்-

டைக்கருதித் தத்தம் ஜாதி ஆசாரக்கட்டு விருப்பு வெறுப்புக்களைச் சற்று மறந்து உழைத்து வாருங்கள். உங்கள் உண்மையான மகாபிமானத்தை ஜனங்களின் முற்போக்கான நிலைமையின் பொருட்டு உழைப்பதில் காட்டுங்கள். எல்லாரும் ஆசார விவகாரங்களிலும் புத்தியிலும் சுவாதீனமுள்ளவராகக்கடவர். அப்படியானால் பூலோகத்திலுள்ள எந்த ஜாதியாரும் உங்களை சுவாதீனமற்றவராகும்படி செய்யவே முடியாது.

ரோமாபுரியும் இந்தியாவுக்குப்படிப்பினை போதிக்கின்றது. ரோமாபுரி க்ஷீணதசையையடைந்து பற்பல ஆபத்துக்குள் அகப்பட்டுச் சீர்குலைந்ததற்குக்காரணங்கள் அநேகமிருக்கின்றன. என்றாலும், அக்காரணங்களுள் முக்கியமானது இதுவென்று எடுத்துரைப்பது அரிது. ஆனால், ஒன்றுமட்டும் நிச்சயமே. பிற்காலத்திய ஸீஸர்களது (Caesars) அரசாட்சியில், கவர்ன்மெண்டார் மேன்மேலும் அனுவசியமாக ஜனங்கள் தாமே பார்த்துக்கொள்ளவேண்டிய ஒவ்வொரு விஷயத்திலும் தங்கள் தலையை நுழைத்துக்கொண்டு வந்ததனால்தான் ரோமராஜ்ஜியம் பலமற்றுத்தளரலாயிற்று.

ஜனங்களே பார்த்து வரவேண்டிய கைத்தொழில் வேலைகளை அரசாங்கத்தாரே அனுவசியமாய் எடுத்து நடத்திவந்ததினால், அவ்வேலைகளில் ஜனங்கட்குப் பழக்க மேற்படாமலும் அவர்களே நிர்வகித்துப் பார்க்குந் திறமையுண்டாகாமலும் போகநேரிட்டது. இவற்றோடு, நாணயம் சரியாய் வழங்கி வாராததனாலும், பட்டாள உபத்திரவம் அதிகமாயிருந்தபடியாலும் விவசாயிகள் தத்தம் உழவு வேலையை விட்டுவிடவும், வியாபாரி நாணயசாலையினின்று நீங்கவும் நேரிட்டன. ஜனங்கள் தங்கள் சாப்பாட்டுக்கு வேண்டிய தானியத்துக்கு ஸீஸருடைய கிருபையை எதிர்பார்க்க வேண்டியிருந்தது. கவர்ன்மெண்ட் கஜானாவிலிருந்தே ஏழைகளுக்கு போஜனப் பொருள் அளிக்கப் பட்டுவந்தது. சக்கரவர்த்தி ஆயுதபலத்தாலேயே ஆண்டு வந்தார். ஜனங்கள் கவர்ன்மெண்ட் நிர்ப்பந்தத்துக்குப் பயந்தே கைத்தொழில் வேலை செய்துவந்தார்கள். ராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள் கேள்விகேட்பாரில்லாது சோம்பேறிகளாயும் செய்யத்தகாதனசெய்பவர்களாயும் ஆனார்கள். ஜனங்கள்

மேன்மேற் பெருகும் தரித்திரத்தையும் மனத்தளர்ச்சியையும் பெற்றார்கள். இவ்வகையாக தேச ஒற்றுமை, அபிமானங்கள் ஒழியப் பெற்றமையால், வடக்கேயிருந்து கொள்ளையடிக்கும் கூட்டப்படைகள் இலகுவாய் ரோமராஜ்யத்தை யழித்துவிட நேரிட்டது.

## தற்கால க்ஷேமத்துக்கு ஒன்றியுழைத்தல்.

ரோமாபுரி நிலைகெட்டு அழிந்ததின் காரணத்தை மறவாது மனதில் வைத்துக்கொண்டு நம் தேசம் விடுதலைப்படுவற்கேற்ற சிறந்த முறைகளைத் தேடவேண்டும். நாம் எக்காலத்திலும் நல்ல நிலைமையிலேயேயிருந்து வரவேண்டுமானால், ஜனங்களுக்கு அவரவர்கள் செய்யவேண்டிய கடமைகளையும் அவர்களாலே தான் தேசத்துக்கு மகிமையும் கௌரவமும் உண்டாகும் என்ற மெய்யுணர்வையும் போதிக்கவேண்டும். உயர்ந்த கல்வியும் ஐசுவரியமும் உள்ளவர்கள் தாழ்ந்தநிலைமையிலுள்ளவர்களை ஊக்கப்படுத்தியும், கல்வி புகட்டியும் மற்றும் உரியகடமைகளை மேற்கொள்ளவும் வேண்டும்.

செயலற்றுக் கிடப்பவர் தம்மைத்தாமே காப்பாற்றிக்கொள்ளும் சக்தி வரும்வரையில்தான், அவர்களுக்கு நாம் உதவிசெய்யவேண்டும். அதற்கப்பால் தங்களையே சார்ந்துவரும்படி அவர்களை விட்டுவிடவேண்டும்.

நாம் கூடியசீக்கிரத்தில் தேசச்செல்வநூலாதார விதிகளை (Principles of economics) சரிவரக் கற்கவேண்டும். நாணயம், புத்திகூர்மை, தொழின்முயற்சி முதலிய சக்தியுடையவர்கள் பெரியகைத்தொழில்களை யெடுத்துநடத்தி வரும்படி ஊக்கிவரவேண்டும்.

## இந்தியாவும் புதிதாகக்கண்டுபிடிக்கப்பட்ட யந்திரங்களும்.

பூர்விக இந்தியாவும் நமக்குச்சில படிப்பினைகளைப் புகட்டுகின்றது. இந்தியா பிராசீனகாலத்தில் மேனாட்டோடு செய்த தீவிரமான வியாபாரத்தைப்பற்றியும், அதன் விலையுயர்ந்த விளைபொருள்களைப் பற்றியும் முன்னமே ஆரம்பத்தில் சொல்லியிருக்கிறேன். ஆனால், நம்தேசத்தில், மேற்குறித்த பழையகாலத்திலே இயந்திரத்தேர்ச்சி அதிகமாயில்லை. ஏனென்றால் புத்திக்கூர்மையில்லாத தாழ்ந்த

ஜாதியாரிடம் இயந்திரத்தைக் கையாளுதல் விட்டுவிடப்பட்டது. தற்கால சிற்பசித்திரவேலைகள் பூர்வகிரேக்கரது வேலையத்தோடு ஒப்பிடத்தக்கவையல்ல. உலகத்தின் உயர்தரஜாதியாரென்று மதிக்கப்படுபவர்கள், இயந்திரத்தில் அடைந்துள்ள தேர்ச்சியை நாமும் பின்பற்றிப் பிடிக்கமுடியவில்லை. இதற்குக்காரணம் என்னவென்றால், உயர்ந்த புத்திக்கூர்மையுள்ள ஜாதியார்கள் இயந்திரங்களைத்தாங்களே கையாளுதலைவிட்டு, அவ்வளவுசாமர்த்தியமும் புத்திக்கூர்மையும்போதாத சாமான்யஜாதியார் அவற்றைச்செய்துவர விட்டுவிட்டதேயாம். நாம் பாஷாஞானத்திலும், சூக்ஷ்மஅறிவு முதிர்ச்சியிலும் உலகத்தின் மற்றெந்த மேலான ஜாதியாருக்கும் பிந்தினவரல்ல. நம்மிடம் தொழிற்சாமர்த்தியமும் இல்லாமல் போகவில்லை. அது இருக்கிறதென்பதைத் தாழ்ந்த தொழிலாளிகளிடமுள்ள புத்திநுட்பத்தாலும் சாமர்த்தியத்தொழிலாலும் அறிந்துகொள்ளுகிறோம். தொழில் செய்வதற்கென்று குறிப்பிட்டஜாதியாரேயன்றி, பொதுவாய் தேசத்தாரெல்லோரும் கைத்தொழிலைக் கற்றுவரவேண்டும். தம் இளம்பருவத்திலேயே, பிராமணப்பிள்ளைகளும், படித்த மௌல்வி (moulvies) களது பிள்ளைகளும் தொழிற்கருவிகளை உபயோகிக்கும் முறையைக்கற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வோர் உயர்தர வித்தியார்த்திடும் (graduates) உத்தியோகத்தையே நாடிச் செல்வதை நிறுத்தி, கைத்தொழில்வேலையில் அமர்ந்துவரவேண்டும். அப்படிச்செய்துவருவாராகில் நம் தேசத்தார் பாஷாஞான முதிர்ச்சியில் பேர்போனவராயிருப்பதுபோல், கைத்தொழில் இயந்திரவேலைகளிலும் அவ்வாறேயாவார்கள் என்பதில் ஐயமில்லை.

## தற்காலத்து நான்கு முக்கிய ஏற்பாடுகள்.

தற்காலத்தில் மேனாட்டார் அடைந்திருக்கும் உன்னதபதவியைப்பார்த்து நாம் அநேகபடிப்பினைகள் படித்துக்கொள்ளுகிறோம். சென்ற பல நூற்றாண்டுகளின் சரித்திரத்தைத் திரும்பப்பார்க்கும்பொழுது, மேனாட்டு ஜாதியார் அக்கால அளவுக்குள்ளேயே அந்தகாரத்தினின்றும் வெளிப்போந்து தற்காலத்தில் மேலான நாகரீக பதவியடைந்திருப்பதை நாம் பார்க்கிறோமல்லவா? அவ்வித மாறுதலுக்குக் காரணமாயிருப்பவை நான்கு முக்கிய ஏற்பாடுகளேயாம்.

## கைத்தொழிலை மேற்கொண்டு நடத்துவதற்கு இன்றியமையாத முதல் மிகுந்திருத்தில்.

சென்ற சில நூற்றாண்டுகளாக முதலைப்பிரயோகிக்கும் முறை (Captalistic programme) ஒழுங்குபட்டு நடந்துவருகின்றது. 'முதல் முறை' சம்பந்தப்பட்ட நாணய ஒழுங்கு, நாணயச்சாலைகள் (Banks), நாணயமாற்றுச்சாலைகள் (Exchanges) முதலியவற்றால் உண்டாகும் நன்மைகளைப்பற்றி, நான் விவரித்துச் சொல்லவேண்டுவதில்லை. முதல்களை சாஸ்திரீயமாய் எப்படி உபயோகப்படுத்துவதென்பதைக் கற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது.

இதற்காக நம்முடைய கலாசாலைகளிலும் தேசச்செல்வ அபிவிருத்தி சாஸ்திர (Economics) த்தை முன்னுக்குக் கொண்டுவருவதற்கென்று, ஏராளமான பணத்தை உபயோகித்து வரவேண்டும். நம் வாலிபர்கள் அந்தசாஸ்திரத்தை சரிவர அறிந்துகொள்ளவேண்டும். மேற்குறித்த சாஸ்திரத்தின் நுணுக்கத்தை யறிவதற்கென்று வாலிபர்கள் மேனாட்டுச் சர்வகலாசாலைகளுக்குப் போய்க் கற்றுவரவேண்டும்.

## இரண்டாவது 'கிளர்ச்சி.'

இக்கிளர்ச்சி மேனாட்டில் தொடங்குவதற்குமுன், அங்குள்ள வைதீகக் குருக்கண்மார் ராஜாங்க விஷயங்களிலும், வியாபார விஷயத்திலும், மற்றைய லௌகீக விஷயங்களிலும் அனாவசியமாய்த் தலையிட்டுவந்தார்கள். அதைத்தடுத்து ஒழிப்பதற்கென்றே இக்'கிளர்ச்சி' எழுந்தது. கி. பி. 13-ம் நூற்றாண்டில் ரோமாபுரிக்கோவில் திருச்சபையார் (Church of Home) வைதீக விஷயங்களில் மாத்திரம் பிரவேசிக்கவேண்டியிருக்க, அதோடு லௌகீக விஷயங்களிலும் தலைநுழைத்து வந்தார்கள். ஜனங்கள் அதை நிறுத்த மூன்று நூற்றாண்டாக முயன்றுவந்தார்கள். அப்பால்தான் மார்ட்டின் லூதர் (Martin Luther) என்பவர் தோன்றி அவ்விதத்தொடர்பை எதிர்த்து முறித்து ஒழிக்கலானார். அதுமுதற்கொண்டே, அத்திருச்சபையார் வைதீகவிஷயங்களில் பிரவேசிக்கலாமேயொழிய லௌகிகவிஷயங்களில் அவர்க்கு யாதொரு சம்பந்தமுமில்லையென்பது ஏற்பட்டு அப்படியே நடந்துவருகின்றது. இவ்விஷய சம்பந்தமாய் நான் குறித்துச் சொல்வதென்னவென்றால், இந்தியாவிலும் மதசம

பந்தப்பட்ட இடையூறுகள் பலப்பட்டிருப்பதால்தான், அவை, சிறந்த புத்தியுள்ள பெரியோர்கள் லௌகிக விஷயங்களைத் தக்கபடிகவனிக்காமலும் தேசச்செல்வமுறைகளைக் கற்றுத் தேர்ச்சியடையாமலும் தடுத்து வருகின்றன என்பதே.

இந்திய ஜாதியார், மேனாட்டுக் கைத்தொழில் ஒழுங்குபற்றிய சாஸ்திர நூலாதார முறைகளை இதுவரை கற்றுககொள்ளாது சும்மாவிருந்ததற்குக் காரணமென்ன? இதற்குக் காரணம் நான் ஒருவாறு சொல்லுகிறேன்:—'நாம் ஜாதிமதஆசாரங்களின் உண்மையை அறிந்துகொள்ளாததே'

உயர்ந்த ஜாதிகளுக்கே மேலான சுதந்தரவுரிமைகளிருக்கின்றனவென்றும் அவை யாவருக்கும் கிடைக்கமாட்டா என்றும் கொண்டுள்ள தப்பெண்ணத்தைத் தவிருங்கள். அப்படிப்பட்ட உரிமைகளை அவர்கள் தாமே வகித்துக்கொண்டதன்றி, அவை அவர்களது உடன்பிறந்தவை என்று எண்ணவேண்டாம். எப்படி ஒரு ஜாதியார் தாங்கள் பிறக்கும்போதே கொண்டுவராமல் தத்தம ஊக்கத்தாலேயே வியாபாரமேன்மையையும், ராஜ்யபெருமையையும் அடைகிறார்களோ அப்படியே மேற்கூறிய உரிமைகளும் ஆகும். தன்னை மறந்து, பொதுநலம் கருதும் விசாலஎண்ணத்தை (Luxury of self-sacrifice) படையுங்கள். கீழ்நிலைமையிலிருப்பவர்களை மேல் உயர்த்தி விடுங்கள். விருப்பு வெறுப்பாகிய மனக்கோணல்களைச் செப்பனிடுங்கள். வெறும்பேச்சுப் பேசிக் காலத்தைக்கழிப்பதைக்காட்டிலும், செய்து, மாதிரி காட்டுங்கள்.

## தேசாபிமான விருத்தி.

ஐரோப்பாவில் மேற்கூறிய தேசாபிமானம் பலப்பட்டிருக்கிறது. ஐரோப்பா முழுவதிலும் 2000-வருடகாலமாக தோன்றி ஒவ்வொரு தனிமைப்பட்ட ஜாதியும் ஐக்கியப்பட்டுப் பலப்படுவதற்கான கிளர்ச்சி நடந்துவந்திருக்கிறது. முற்காலத்தில், அவையெல்லாம் சிறிய ராஜ்யங்களாய்ச் சேர்க்கையின்றிச் சிதறிக்கிடந்தன. ஆனால் இப்போதோ அவை ஒற்றுமைப்பட்டுத் திரண்டு பலமுடைய தனித்தனி முழுராஜ்யங்களாகி விட்டன.

நான் வாசித்த அளவில், 'உண்மையான தோஷக்ஞர்' (candid critics) அடிக்கடி நம்மைப்பற்றிக் குறைகூறுவதென்னவென்றால், நாம் பலபிரிவுபட்டவராயும் தேசஒற்றுமையில்லாதவராயும் இருப்பதால், தேசத்தின் பொதுநன்மைக்குக் கூடியுழைக்கும் விசால மனமற்றவராயிருக்கிறோம் என்பதே. அப்பேர்ப்பட்டகுறை நம்மிடமிருப்பது வாஸ்தவமானால் நாம் தேசாபிமானத்தையும் புத்தியையும் கொண்டுசெலுத்தி ஐக்கியப்பட்டுக் கூடியுழைப்பதற்கான முறைகளுக்கு அடிப்போட்டுவரவேண்டியது நமது கடமையாகும். தேசமுழுவதும், யாவரும் ஒருவரையொருவர் அறிந்து பேசிக்கொள்வதற்கு ஒரு பாஷையை ஏற்படுத்துவதோடுகூட தேசஐக்கியம் பலப்படுவதற்கான போதனையையும் புகட்டி வரவேண்டும்.

## சாஸ்திரீய முறைகளின் தேர்ச்சி.

ஐரோப்பாவில் 150-வருட காலத்துக்குள்ளேயே முற்றுப்பெற்றிருக்கும் 'சாஸ்திரசித்தி' யைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அவ்வித 'சாஸ்திர விருத்தி'ச்சரிதத்தை நோக்குங்கால் அதிக ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. மேற்கூறிய காலவளவுக்குள், ரெயில் வேக்களும புகைக்கப்பல்களும் மின்சாரத் தந்திகளும் தீப்பெட்டிகளும் ஆவியினால் ஏற்றப்படும் காந்தி விளக்குகளும் மின்சாரத்தின் ஒவ்வோர் உபயோக முறை யறிவும்—பேசும் வாத்தியமும்(Phonograph,) ரான்ஜன் கிரணங்களும் (Rontgen rays,) சப்த வர்ணப்பிரிவு முறைகளும் (Spectrum analysis,) தேர்ச்சியடைந்த ரசாயண சாஸ்திரமும், வஸ்துவின் அணுவிதிகளும் (Laws of molecular constitution of matter,) சக்தி பரிபாலன விதியும்(conservation of matter) வியாதிகள் புழுஅணு மூலமாகும் என்ற ஐதிகமும் (Germ theroy of disease) ஆகிய அநேக முக்கியமான சாஸ்திரத் துறைகளில் விசேஷமான தேர்ச்சியடைந்திருக்கிறார்கள்.

## இந்தியா பின் வாங்கியிருத்தல்.

நண்பர்களே! இந்தியா மேற்கூறிய துறைகளில் அதிக அபிவிருத்தியடையவில்லையென்பதைக் கவனிக்க, நமக்கு வெட்கத்தையும் துக்கத்தையும் கொடுக்கவில்லையா? "இந்தியா தேசத்தார் மனத்தளர்ச்சியுற்றதனால் தான், அவர்கள் திரும்பத்திரும்பப் புராதன எண்

ணங்களையும் ஆசாரங்களையும் பின்பற்றி வருகிறார்களேயொழிய, நவீன நாகரிகமுறைகளில் தேர்ச்சி சிறிதும் பெறக்கூடவில்லை" யென்று ஓர் ஆசிரியர் நம்மை இகழ்ந்து கூறிய மொழிகள் வாஸ்தவந்தானா? நம் தேசத்தாரது புத்திதீக்ஷண்யம் தளர்ந்துவிட்டது என்று என்னால் நம்பமுடியாது. நம் தேசத்தார் ஊக்கங்கொண்டால் 'லோக ஞானபிவிருத்தி' விஷயமாய் எவ்வளவோ நன்மை செய்யலாம். வெகுகாலத்திற்கு முன்னிருந்த நமது மகான்கள், தத்துவ சாஸ்திரத் தேர்ச்சியிலும், பாஷா ஞானப்பயிற்சியிலும் எவ்வளவோ முதன்மை பெற்று, அத்துறைகளில் உலகமுழுவதுக்கும் ஞானத்தைக் கொடுத்திருக்கிறார்கள் என்ற நியாயமான கௌரவமும் பெருமையும் நமக்கு உண்டன்றோ. ஆனால் அக்காலத்தில் நாம் எவ்வளவு புத்தி தீக்ஷண்யத்தில் முதன்மை பெற்றிருந்தோமோ அதைத் திருப்பப்பெற்றால்தான் நாம் அப்படிப் பெருமை பாராட்டலாம். மேனாட்டார் ஞானபிவிருத்தியை மேன்மேலும் நாடிவருகிறார்கள். ஆனால் நம் தேசத்தாரோ, ஆராயாதே, தொன்றுதொட்டுவந்த முறைகளைக் குருட்டுத்தனமாய்ப் பின்பற்றியும், மேல்நோக்கிய முறையைக் கவனிக்காமலும், மேனாட்டாரைப் போல மனோதிடமும் புத்திதீக்ஷண்யமும் அடைய ஆவலற்றவராயும், 'கிணற்றுத்தவளை'களாயும் இருந்துவருகிறார்கள். நான் 'மாத்யூ ஆர்னல்ட்' கவிஞர் பாடிய நேர்த்தியான சில அடிகளைச் சொல்லி முடிக்கிறேன். அதன் தாத்பரியம் பின்வருமாறு:—

'கீழ்த்தேசத்து நாகரீகமானது, மேனாட்டு நாகரீகமாகிய சூறைக்காற்று சுழன்றுவீசித் தன்னை அழிக்க முயல, அதை அலக்ஷியத்துடன் பொறுத்துக்கொள்வதுபோல் தலைகுனியப்பெற்றிருந்தது. ஆனால், அது, சூறைக்காற்றுத் தீர்ந்து ஒழியப்பெற்றபின், எப்பொழுதும்போலவே தியானத்துறையில் தன் சிந்தையைச் செலுத்திவரலாயிற்று."

## மேனாட்டு முறைகளில் விலக்கற்பாலன.

நண்பர்களே! நான் மேனாட்டுச் சுற்றுப்பிரயாணங்களிலிருந்து திரும்பிவந்திருக்கிறபடியால், மேனாட்டையே சிலாகித்துக் கூறுகிறேன் என்றாவது, இந்தியாவுக்கு இனிமேல் ஒருகாலத்திலும் மேன்மை

மம் விமோசனமில்லவேயில்லையென்று, என் நம்பிக்கையை ஒழித்து விட்டேன் என்றுவது எண்ணிவிடாதேயுங்கள். விஷயங்களை நடுநிலையாய் ஆராய்பவன் எவனும் மேனாட்டு நாகரீகத்திலும் அநேக குறைவுகளிருக்கின்றன என்பதை ஒத்துக்கொள்வான். பெரியகைத்தொழிற் பட்டணங்களில் ஜனப்பெருக்கு மிகுதியால் உண்டாகும் கெடுதிகள் பலவுள. அக்கேடுகள் அந்நாட்டாருக்குப் பிற்காலத்தில் அழுந்தியுறைக்கும் என்பதில் ஐயமில்லை. வாஸ்தவமாகவே, அவை அவர்களது க்ஷேமத்துக்கு ஹானிகரமாகும். மேனாட்டில் ராஜாங்க முறையிலும் ஆசாரவழியிலும், தேசசவுக்கியத்துறையிலும் இன்னும் அநேகவிஷயங்கள் நிர்த்தாரணம் செய்யப்படவில்லை. தொழிலாளிகளுக்குள்(Labourers) அடிப்பட்ட ஒற்றுமையில்லை. மேனாட்டில் எங்கும் பொருளாசையே பெருத்து வருகிறது. அந்நாடெங்கும் ஜனங்கள் வீண் ஆடம்பரத்திலும், பணப்பூஜையிலும் ஆவலுள்ளவராயிருப்பதால், சாதாரணமும் சௌகரியமும் ஆடம்பரமுமற்ற முறைகளை யநுஷ்டித்துவரும் பழக்கம் அங்கேயில்லை. ஆனால் நம் தேசத்தாரோ, மேற்கூறிய சாதாரண சௌகரிய வழிகளையே பின்பற்றிவருகிறார்கள்.

இந்தியாவானது நீதிசாஸ்திர முறையில் கண்டிருப்பதற்கேற்க, சுலபமான சௌகரியஆசாரவழியை நாடியும், மேனாட்டுச்சிறந்த புத்திமான்களாலும் சாத்தியமாகாத பெரும்விஷயங்களை நிர்த்தாரணம் செய்துதந்தும், தற்கால சாஸ்திரரீதியான செல்வஅபிவிருத்தி முறையைத் தனக்கு உரிமையாக்கிக்கொள்ளவும், செல்வப்பெருக்கால் கண்மூடப்பட்டுப் போகாமல் சாதாரணஆடம்பரமற்றஆசார வழியையே எப்பொழுதும் பின்பற்றிவருவதுமே, அது தன் நன்மையும் உலக நன்மையுமாகக்கருதிச் செய்யவேண்டிய கடமைகளாகும். அதாவது மேனாட்டாருக்குத் தன் நீதிசாஸ்திரத்தத்துவத்தை உபதேசிக்கவும், அவர்களிடமிருந்து சடசாஸ்திரத்தைத் தான் கற்று உபயோகித்துக்கொள்ளவும் வேண்டுவதேயாம்.

முற்றும்.

வில்லிபுத்தூராழ்வார்

# மகாபாரதம்.

[புதுமாதிரியாக மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பதிப்பிக்கப் பெற்றது.]

விலை ரூபா மூன்று.

நம் சங்கத்தில் [illegible] வெளியிட்டிருப்பதாகப் பிரதிக்ஞையைத் தெரிவித்திருந்த மகாபாரதமென்ற இப்போது முற்றுப்பெற்று விட்டது. மூலமுழுமையும் மிகச்செவ்வையாக ஆராய்ச்சி செய்து, அநேகசிறந்த பாடபேதங்களுடன் இந்நூல் பதிப்பிக்கப்பெற்றிருக்கின்றது. அன்றியும் இந்நூல் முழுதும் எளிதிற் பொருள்விளங்கும்படி, இதன்பரிசோதகராகிய ஸ்ரீமத்-சேற்றூர். ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்களால், மிகச்சிறந்த அரும்பதவுரையெழுதி 117-பக்கங்களில் வெளியிடப்பட்டும்; விஷயசூசிகை, அபிதான அகராதி, தொகையகராதி, செய்யுளகராதி, வில்லிபுத்தூரர் சரித்திரமடங்கிய முகவுரை ஆகிய பகுதிகள் சேர்க்கப்பெற்றும்—மொத்தம் 85-பாரங்களுடையதாக இப்புத்தகம் அமைந்துள்ளது. இக்காலத்தில் வெளிவந்த மகாபாரத புஸ்தகங்களில், இம்மாதிரியமைந்த பதிப்பு இதுவரை வெளிவந்ததில்லையென்பது திண்ணம். இப்பதிப்பிற்கு ஏற்படுத்தப்பட்ட விலைத்தொகை, இதன்பொருட்டு [illegible] மற்றைய பதிப்புகளின் அளவையும் ஒப்பிட்டுப்பார்த்தால், மிகச் சௌகரியமானதென்பது நன்குவெளியாகும். தமிழ்நாட்டாரெல்லாம் வாங்கிப்படித்து [illegible] விருத்திசெய்துகொள்ளவேண்டுமென்னும் நல்லெண்ணங்கொண்டே, சங்க அக்கிராசனாதிபதியவர்களால் இவ்வளவு [illegible] செய்து தரப்பட்டுள்ளது. இத்தகைய [illegible] ஒவ்வொருவர் கையிலும் இருக்கத்தக்கதாகையால், வேண்டுவோர், இவ்விலாசத்திற்கு எழுதி, வி. பி. தபால் மூலமாகப் [illegible] பெற்றுக்கொள்ளலாம். தபால்சார்ஜ் பிரத்தியேகம்.

இங்ஙனம்,

மானேஜர்,

தமிழ்ச்சங்கம். மதுரை.

2098

2098

2098